கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(15.09.2019 - 15 புரட்டாதி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 10, கதிர் - 216, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

ஞான ஒளி

ඥාන ඔළි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05


# 'எனது உணர்வுகளை பகிர்ந்து கொள்ளவே அழைத்தேன்'

## கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த பேராயர்



கடந்த புரட்டாதி மாதம் 8ம் திகதி ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற பேராயர், கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர் சந்திப்பின் முக்கிய குறிப்புக்கள்

கடந்த புரட்டாதி மாதம் 8ம் திகதி ஆயர் இல்லத்தில் பேராயரின் அழைப்பின் பேரில் வருகை தந்த கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆயன் என்ற வகையில் தனது மந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை எடுத்துக்கூறி நீதியை நிலைநாட்ட அவர்களின் ஒத்துழைப்பை வேண்டி சுமூகமான முறையில் புரிந்துணர்வோடு தனது உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்தினார். அவ்வேளையில் பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை வழங்கிய உரை பின்வருமாறு.

நான் உங்களை இங்கு அழைத்ததின் முக்கிய நோக்கம் உங்களோடு எனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவே. கடந்த சித்திரை மாத பாஸ்கா தினமான 21ந் திகதி இடம்பெற்ற தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதல் என்னை வெகுவாகப் பாதித்துள்ளது. அந்தச் சோகத்தில் இருந்து இன்னும் நான் மீளவில்லை. ஆலயங்களுக்கு நான் சென்ற வேளையில் அப்பாவி மக்களின் உடல்களைக் கண்டு பதறிய எனது உள்ளம் இன்னும் அப்படியே இருக்கின்றது. அம்மக்களின் ஆயன் என்ற வகையில் இந்நாட்டின் அரசியல் தலைவர்களின் செயற்பாட்டின் மட்டில் வேதனையடைகின்றேன். தாக்குதல் பற்றி முன்னரே தெரிந்திருந்தும், என் மக்களின் உயிர்களைக் காக்க அவர்கள் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இது பற்றி பாராளுமன்ற உறுப்பினர்கள், சிறப்பாக கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் தெரிந்திருந்தும் எனக்கு இதுபற்றி அறிவிக்கவில்லை. இது பற்றி எனக்கு முன்னரே தெரிந்திருந்தால், என் மக்களுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பேன். இந்த வேளையில் நான் உங்களிடம் சொல்ல விரும்புவது அச்சமயங்களில் நான் தனிமைப்படுத்தப்பட்டேன். என்னோடு நீங்கள் யாருமே குரல் கொடுக்கவில்லை. நாட்டின் ஒழுங்கையும், அமைதியையும், ...

தொடர்ச்சி 12ம் பக்கம்..

## ஐப்பசி மாதத்தை மறைபரப்பின் சிறப்பு மாதமாக பிரகடனம்.



திருத்தந்தை 15ம் பெனடிக்ட் அவர்கள் எழுதிய **"அதிமுக்கிய தருணம்"** **(Maximum illud)** எனும் திருமடலின் வெளியீட்டின் 100வது ஆண்டை நினைவுகூர்ந்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டின் ஐப்பசி மாதத்தை மறைபரப்பின் சிறப்பு மாதமாக பிரகடனம் செய்துள்ளார். **"நீங்கள் திருமுழுக்குப் பெற்று மறைப்போதகப் பணிக்காக அனுப்பப்படுகிறீர்கள்"** எனும் கருப்பொருளிலே ஐப்பசி மாதம் சிறப்பிக்கப்படுகின்றது என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் திருத்தந்தை

## தேசிய மறைக்கல்வி தினம் 15.09.2019

## 105 உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினம் 20.09.2019

## செக்கடித்தெரு பங்கு புனித வேளாங்கண்ணி திருவிழா -08.09.2019



செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கின் அன்னை வேளாங்கண்ணி ஆரோக்கியத் தாயின் வருடாந்த திருவிழா 08.09. 2019 அன்று அன்னையின் பிறந்தநாள் அன்றே கொண்டாடப்பட்டது. விசுவாசிகளின் வேண்டுதல்களுக்காக அன்னையின் திருச்சுரூபம் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருப்பதை படத்தில் காணலாம். மக்கள் காலை முதல் இரவு வரை தங்களின் விண்ணப்பங்களை சமர்ப்பித்தனர். **படம் : திரு. டிக்சன் பர்னாந்து**

# தேவ அன்னையின் பரிந்துரையை வேண்டி விசுவாச சாட்சிகளாவோம்





வருடாந்த மாத்தறை மாதா திருத்தல திருவிழாவின் சிறப்பு திருப்பலியை ஒப்புக்கொடுத்த காலி மறைமாவட்ட ஆயர் மேதகு. ரேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை தனது மறையுரையில் உலகெங்கும் சொல்ல முடியாத, நினைக்க முடியாத பேரழிவுகள் பரவிக் கொண்டிருக்கின்றது. அதிலிருந்து நாம் விடுபட என்னாலும் உங்களாலும் முடியாது. அவற்றிலிருந்து எங்களைக் காப்பாற்ற தேவ அன்னையின் பரிந்துரையை வேண்டுவோம்.

தேவ அன்னையிடம் மிகவும் நெருக்கமாகி எம் சகோதர மக்களுக்கு சாட்சியாக வேண்டுமென உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

## தேவ அன்னையே நாங்கள் உம்மை அன்பு செய்கின்றோம்.



தொடர்ச்சி 15ம் பக்கம்..

**நன்றி மலர் தூவுகின்றோம்.**

எமது தேசிய மறைக்கல்வி, கல்வி, விவிலியப்பணி இயக்குனராக கடந்த எட்டு வருடங்களாக அளப்பரிய பணியாற்றிய அருட்பணி பியல் ஜானக்க அவர்கள் மேற்படி மறைக்கல்வி நடுநிலையத்தில் தனது சேவை காலத்தை நிறைவு செய்து தனது மறைமாவட்டமான குருனாகலுக்கு பணியாற்றச் சென்றுள்ளார்.



இவர் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தில் ஆற்றிய பணிகளுக்காக இறைவனுக்கு நன்றி நவில்கிறோம். அருட்தந்தைக்கும் நன்றி கூறுகிறோம். இவர் தனது மறைமாவட்டத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள பணிகளை சிறப்பாக செய்திட இறையருளை வேண்டுகிறோம்.

**வரவேற்கின்றோம்**

எமது தேசிய மறைக்கல்வி, கல்வி, விவிலியப்பணி இயக்குனராக அருட்பணி பெனட் சாந்த அவர்கள் சென்ற மாதம் புதிதாக பதவியேற்றார்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



## நான் புறப்பட்டு என் தந்தையிடம் போவேன். (தி.பா 51)

# கொழும்பு உயர்மறைமாவட்ட அப்போஸ்தலிக்க மறைக்கல்வி பணியக அறிவித்தல்கள்

**மறைப்பணியாளர் தேர்வு**

இவ்வருடம் ஐப்பசித் திங்கள் 19ம் திகதி தேசிய மறைப்பணியாளர் 1ம், 2ம், 3ம் தேர்வுகள் நடாத்தப்படவுள்ளன. இத்தேர்வுகளுக்கான மீட்டல் வகுப்புக்கள் வடகொழும்பு வட்டாரம், கிரேண்பாஸ் பங்கு, தூய சூசையப்பர் ஆண்கள் கல்லூரியில், கீழ்வரும் திகதிகளில் நடைபெறவுள்ளன.

28.09.2019 : காலை 8.30 - மாலை 4.30 வரையில் - 3ம் தேர்வு
05.10.2019 : காலை 8.30 - மாலை 4.30 வரையில் - 2ம் தேர்வு
12.10.2019 : காலை 8.30 - மாலை 4.30 வரையில் - 1ம் தேர்வு

**மறையறிவுப்போட்டி**

ஐப்பசித் திங்கள் 5ம் திகதி காலை 9.00 மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட மறைக்கல்வி மாணவர்களுக்கான மறையறிவுப்போட்டி நடைபெறவுள்ளது. பங்கினால் தேர்வு செய்யப்பட்ட தரம் 6, 7, 8 மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும் தரம் 9, 10, 11 மாணவர்கள் மேற்பிரிவிலும் பரீட்சைக்கு தோற்றுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**க.பொ.த. சாதாரணத் தர மாணவர்களுக்கான மீட்டல் வகுப்பு**

2019ம் ஆண்டு மார்கழித் திங்கள் க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சை நடைபெறவுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து கத்தோலிக்க மாணவர்களுக்காகவும் மீட்டல் வகுப்பொன்று மறைக்கல்விப் பணியகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் வருகைத்தந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**நாள் : 2019 ஐப்பசி 26ம் திகதி**


**இடம் : புனித வியாகுல மாதா ஆலய பங்கு மண்டபம்**

**நேரம் : காலை 8.00 – மதியம் 2.00 மணி வரையில்**

குறிப்பு: கட்டணம் இலவசம். வகுப்பு சிறப்பாக அமைந்திட, ஐப்பசி மாதம் 18ம் திகதிக்கு முன்பதாக தங்கள் பாடசாலையிலிருந்து வருகைத்தரவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பாடசாலை விபரங்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறியத்தரவும். 0779752143

**அதி. வண. மனோகுமாரன் நாகரட்ணம்**
**கொழும்பு உயர்மறைமாவட்டம் மறைக்கல்விப் பணியகம்**
**ஆயர் இல்லம், கொழும்பு 08.**

## குருத்துவ வாழ்வில் பொன்விழா காணும் அருட்தந்தை ஜோ



தலவாக்கலையை பிறப்பிடமாகக் கொண்டு மாசிலாமணி மற்றும் சவரியம்மாள் ஆகியவர்களுக்கு சேவை செய்ய ஆண்டவர் கொடுத்த வரமாக 1946 வைகாசி 16ம் திகதி இவ்வுலகில் பிறந்த அவரிற்கு தாய் தந்தை இட்ட பெயர் பாக்கியம். தனது ஆரம்ப கல்வியை தலவாக்கலை புனித பெற்றிக் வித்தியாலயத்தில் முடித்தார். "அழைக்கப்பட்டவர் பலர் தேர்ந்தெடுக்கப்பட்டோர் சிலர்" என்பதற்கிணங்க அழைக்கப்பட்டவர்களுள் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இறைமக்களுக்கு சேவை செய்யும் ஆசையோடும் நோக்கோடும் 1966ம் ஆண்டு ஆவணி 5ம் திகதி தேவநற்கருணை நாதர் சபையில் இணைந்தார். 1967ல் தேவநற்கருணை நாதர் சபையில் உறுப்பினராகி கொழும்பு புனித பிலப்னேரி ஆலயத்தில் கல்வியோடு பணியையும் பணிவாழ்வின் ஆரம்பத்தில் முதலாவது காலையும் எடுத்து வைத்தார்.

அதன் பின்னர் 1969ம் ஆண்டு வைகாசி 1ம் திகதி உறுதிமொழியை எடுத்த அவர் 1976 வைகாசி 1ம் திகதி தனது நிரந்தர உறுதிமொழியையும் எடுத்தார். 1969ல் இருந்து 1999 வரை 30 வருடங்களாக ஓர் அருட்சகோதரராக கொழும்பு புனித பிலிப்னேரி மற்றும் மாத்தளை புனித தோமஸ் ஆலயங்களிலும் இறைபணியாற்றினார். தனது வாழ்வையே ஆண்டவருக்கு அர்ப்பணித்த அவர் அருட்தந்தையாக வேண்டும் என்ற நோக்கோடு அம்பிட்டிய தேசிய குருமடத்தில் கற்றார்.

2005ம் ஆண்டு தை 4ம் திகதி கொழும்பு புனித பிலிப்னேரி ஆலயத்தில் கண்டி ஆயர் மேதகு. வியானி பர்னாந்து ஆண்டகையின் முன்னிலையில் தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்டு அருட்தந்தையானார். சேவையையே வாழ்வாக கொண்ட இவர் கொழும்பு புனித பிலிப்னேரி ஆலயம், மாத்தளை புனித தோமஸ் ஆலயம், யாழ்ப்பாணம் பெரியவியான் புனித ஜோன் த பெப்டிஸ் ஆலயம் என்பவற்றில் அருட்தந்தையாக கடமையாற்றினார்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## 2வது முறையாகவும் விடுமுறை விவிலிய கல்வி தெமட்டகொடை பங்கில்.





கிளரேசியன் சபையினரால் நடாத்தப்படுகின்ற விடுமுறை விவிலிய கல்வி இவ்வருடமும் 2வது முறையாகவும் தெமட்டகொடை பங்கில் 26.8.2019 முதல் 31.8.2019 வரை நடைப்பெற்றது. இதில் 4ம் தரம் தொடக்கம் 9ம் தரம் வரை கல்வி கற்கும் மாணவர்கள் பங்குபற்றினார்கள். 2018ம் ஆண்டு நற்செய்தியாளர்களைப் பற்றி விளக்கிய அருட்சகோதரர்கள் இவ்வருடம் திருவிவியத்தின் ஆரம்ப நூல்களாக ஐந்நூல்களைப் பற்றி மாணவர்கள் மிக எளிய முறையில் அறியும் வகையில் ஆடல், பாடல், வரைதல், கதைகள் மூலமாகவும் மேலும் திரைகளில் படங்களையும், தகவல்களையும் காட்சிப் படுத்தியும் விளக்கப்படுத்தினர். சிறுவர்களின் மனதினை அறிந்த அருட்சகோதரர்கள் தாமும் சிறுவர்களாகவே மாறி பல போட்டி நிகழ்ச்சிகளையும் நடாத்தி பரிசில்களையும் வழங்கினர். மேலும் திருச்சபையின் படிப்பினைகள் மிக இலகுவான முறையில் கற்பித்தார்கள். விடுமுறையை பயனுள்ள வகையில் கழிக்க மாணவர்களுக்கு இவ்வாறான நிகழ்வினை ஒழுங்கு செய்த எம் பங்குத்தந்தை அருட்பணி. இக்னேஷியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளாருக்கும், தமது பொன்னான நேரத்தை மாணவர்களின் விவிலிய அறிவினை வளர்க்க உதவிய அருட்சகோதர்கள் 1. இரேஷ் நிமர்ஷன பர்னாந்து, 2. யோகராசா டொனால்ட் கிறிஸ்டி, 3. தேவபாலன் பற்றிக் ஜோன்சன், 4. யோகபாலன் சுதர்சன் ஆகியோருக்கு எமது மனமார்ந்த நன்றிகள்

**தகவல் : திருமதி. நிர்மலா**

## சுக நல சேவையில் 90 ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்



14 செப்ரெம்பர் 2019 அன்று இலங்கை திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் திருச்சிலுவையின் மகிமை விழாவை தமது சபையின் பெருவிழாவாகக் கொண்டாடும் வேளை இலங்கையில் திருச்சிலுவைக் கன்னியர் சபையினர் சுகநல சேவை பணியில் 90 ஆண்டுகளை (1930 - 2019) நிறைவை செய்வதையும் திருச்சிலுவைக் கன்னியர் சபை சுவிற்சலாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844 ஸ்தாபிக்கப்பட்ட 175ஆவது ஆண்டு நிறைவையும் மகிழ்வோடும் கொண்டாடுகின்றனர்.

கப்புச்சின் சபையைச் சேர்ந்த தியோடோசியஸ் அடிகளாரால் அருட்சகோதரிகள் பேர்னாடா ஹெய்ம்காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா ஆகியோருடன் சுவிற்சலாந்து நாட்டில் மென்சிங்கன் கிராமத்தில் 17 ஒக்ரோபர் 1844ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட திருச்சிலுவைக் கன்னியர் சபையானது இன்று 175ஆவது ஆண்டு நிறைவில் உலகின் நான்கு கண்டங்களில் உள்ள 18 நாடுகளில் பரந்து பணியாற்றுகிறது. மூன்று சுவிஸ் அருட்சகோதரிகளுடன் 1930ஆம் ஆண்டு இலங்கை ஊர்காவற்துறையில் சுகநல சேவை பணியை ஆரம்பித்த திருச்சிலுவைக் கன்னியர் சபை 90 ஆண்டுகளின் நிறைவில் இன்று இலங்கையின் ஒன்பது மறைமாவட்டங்களிலும் பாக்கிஸ்தானில் ஓர் மறைமாவட்டத்திலும் தன் கிளைகளைப் பரப்பி சேவையை ஆற்றும் ஓர் விருட்சமாகவும் திகழ்கின்றது.

## நீர்கொழும்பு பிரதேச பாடசாலை மாணவ மாணவியர்களுக்கான சித்திரைப்போட்டி...!

இறை ஊழியர் தோமஸ் கர்தினால் குரே அ.ம.தி ஆண்டகையின் 31வது ஞாபகார்த்தத்தை முன்கொண்டு நீர்கொழும்பு பிரதேச பாடசாலை மாணவ மாணவியர்களுக்கான சித்திரைப்போட்டி...!

அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இறை ஊழியரான பென்ஜமின் கர்தினால் குரே அ.ம.தி ஆண்டகையின் புனிதராக பிரகடனப்படுத்தும் குழுவின் ஆலோசனைக்கேற்ப சித்திரைப் போட்டி நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. 'அவரின் புனித வாழ்வின் பலவித நிகழ்வுகளை முன்கொண்ட சித்திரம்' எதிர்பார்க்கிறோம். தரம் 5, 6, 7, தரம் 8,9,10,11,12 பிரிவுகளாக நடைபெறும். முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்கள் முறையே 5000.00, 4000.00, 3000.00 பெறுமதியான வவுச்சர்களையும் ஏனையவர்களுக்கு புனிதரின் உருவம் பொறித்த பரிசுல்களும் வழங்கப்படும். சித்திரங்கள் மாணவர்களின் சுய ஆக்கமென பாடசாலை அதிபர்களின் முத்திரையுடன் குறிப்பிட வேண்டும்.

14' - 18' அளவு தாளில் வரைய வேண்டும். 2019. 09. 27 முதல் நீர்கொழும்பு கமிட்டி கர்தினால் குரே நடுநிலையத்தில் 'ஞானார்த்த பிரதீபய காரியாலயத்தில்" திங்கள் காலை 8.30 - பி. ப 4.00 மணிவரை ஒப்படைக்க வேண்டும். அல்லது அருட்பணி ஊழியர் அ.ம.தி இல. 479, கனே வீதி, இறாகமை என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**தகவல் : டிக்சன்.**



அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி அடிகளார் தமது குருத்துவ வாழ்வின் 25வது ஆண்டு நிறைவு விழாவை புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயத்தில் 01.09.2019 அன்று காலை 7.15 திருப்பலியில் ஒப்புக்கொடுத்து சிறப்பித்தார். இவற்றின் சிலவற்றைப் படத்தில் காணலாம்.

**தகவல் : சந்திரன்.**

ஞான ஒளி
GNANA OLI
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
15 புரட்டாதி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "மறு கிறிஸ்தவர்களாக உருமாறச் செய்வது மறைக்கல்வி"

இம்மாதம் தேசிய மறைக்கல்வி தினத்தை எமது திருச்சபை கொண்டாடுகின்றது. மறைக்கல்வி என்பது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. அதாவது நம்பிக்கை மனித வாழ்வில் மிக முக்கியமானதொன்றாக அமைகின்றது. யானையின் பலம் தும்பிக்கையிலே, மனிதனின் பலம் நம்பிக்கையிலே என்று சொல்வார்கள். மனித வாழ்வில் நம்பிக்கை இன்றி பயணிக்க முடியாது. தனிப்பட்ட மனிதன் தம் வாழ்வில் காணவேண்டிய வளர்ச்சி தன் நம்பிக்கை என்றும் பிறரோடு கொள்ளும் உறவு நிலையில் ஏற்படும் நம்பிக்கை என்றும் பரிணமிக்கின்றது.

ஆனால் நம் கண்களால் காண முடியாத இறைவனோடு கொள்ளும் உறவுநிலை சரியான முறையில் இருக்க வேண்டுமென்றால் அவருடைய உறவு முறையை புரிந்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் அதற்கு இறை நம்பிக்கை அவசியம். இந்த இறை நம்பிக்கை மூலம் தான் ஒருவன் தன் வாழ்வில் முழு மனிதனாக வாழ முடியும். இதற்கு நமக்கு வழிகாட்டலாக உருவாக்க பயிற்சி முறையாக இருப்பது மறைக்கல்வி ஆகும்.

"தாயின் மடிதான் குழந்தையின் முதல் பள்ளி" என்றார் திருத்தந்தை 10 பத்திநாதர். "கிறிஸ்தவ விசுவாசத்தை ஊட்டுவதும் வளர்ப்பதும் அதில் முதிர்ச்சி பெறச் செய்வதும் மறைக்கல்வியே" என்றார் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர். ஆம் கிறிஸ்வை மீண்டும் ஒவ்வொருவருடைய உள்ளங்கிளிலும் ஈன்றெடுத்து, அவருடைய மனநிலையையும் மதிப்பீடுகளையும் கொண்டு மறு கிறிஸ்துக்களாக உருமாறச் செய்வது தான் மறைக்கல்வியின் நோக்கம்.

இயேசு தம் சீடர்களுக்கு "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என கட்டளைக் கொடுத்தார். மேலும் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு தரப்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள், தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" (மாற்கு 28:19) என்று பணித்ததிலிருந்து மறைக்கல்வி ஆரம்பமானது. ஆகவே மறைக்கல்வியை கற்பிப்போர் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பயணத்தில் மறைக்கல்வி ஊடுருவதற்கு வழிவகுக்கவேண்டும். அப்பொழுது-தான் அவர்கள் தங்கள் வாழ்வில் ஏற்படும் துன்ப துயரங்கள், போராட்டங்கள் சவால்கள், போன்றவற்றிலும் நம் ஆண்டவர் இயேசுவுக்கான எண்ணங்களையும், செயல்பாடுகளையும் கொண்டு வாழ்வார்கள்.

மறைக்கல்விப் பணியைத் தொடர்ந்தாற்றும் அனைத்து நல் உள்ளங்களுக்கும் மறைக்கல்வி தின வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன். உங்கள் அனைவரின் பணிவாழ்வு சிறக்க இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இம்மாதம் திருச்சிலுவையின் மகிமை விழாவையும், வியாகுல அன்னையின் திருநாளையும் கொண்டா-டுகின்றோம். திருச்சிலுவையின் மகிமையை உணர்ந்தவர்களாக, அச்சிலுவைக்கு எம் வாழ்வை ஒப்புக்கொடுத்தவர்களாக வாழ திருச்சிலுவையிடம் எம்மை ஒப்படைப்போம். அத்தோடு அன்னை மரியா தம் வியாகுலங்களை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து எவ்வாறு அவற்றை ஏற்றுக் கொண்டு வாழ்ந்தார்களே அவ்வாறே நாமும் எமக்கு வரும் வியாகுலங்களை இறைநம்பிக்கையோடு ஏற்று அவற்றிற்கு முகம் கொடுக்க வரம் கேட்போம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# மறைக்கல்வி

மறைக்கல்வி கிறிஸ்தவ நம்பிக்கைகளை, கொள்-கைகளைச் செயலாக்கம் செய்ய அழைக்கும் விசுவாச வாழ்வியல் ஆகும். இது நம்முடைய வாழ்வை மாற்றுவதற்கான கருவியாகத் இதை தாய் திருச்சபை நமக்கு வழங்குகின்றது. மறைக்-கல்வி நல்ல உணர்வுகளை, சிந்தனைகள், மனநிலைகள், பண்புகளை வளர்த்து இறை நம்பிக்கையில் நம்மை முதிர்ச்சியடையச் செய்கிறது.

மறைக்கல்வி என்கிற விசுவாச வாழ்வியல் கல்வி எல்லா உள்ளங்களையும், உளி போன்று செதுக்கி, அழகிய சிற்பமாக உருவெடுக்கத் துணை நிற்கும் ஓர் உயர்ந்த கல்வி. இறையாட்சியை அனைத்து தரப்பினர் உள்ளங்களிலும் விதைக்கும் சிறந்த கல்வி எனலாம். இத்தகைய ஆற்றல் மிகுந்த கல்வி-யானது கருவறையில் இருக்கும் குழந்தை முதல் வாழ்வின் கடைசித் தருணத்தில் இருக்கும் மனிதர் வரை அனைவரும் விசுவாசத்தில் ஆழப்படுத்தப்படுகின்ற ஓர் கல்வியாகும்.

மறைக்கல்வி என்பது திருச்சபை கற்பிக்கும் செபங்களையும், கோட்பாடுகளையும் சட்டத்திட்டங்களையும், கற்றுக்கொள்வதே மறைக்கல்வி என்ற எண்ணம் அன்று தொட்டு கூறப்படுகின்ற ஒன்றாக இருந்தது. அதுவும் சிறுவர்களுக்கு மட்டுமே உரியது என்றே பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் இன்று ஒரு கிறிஸ்தவனின் ஆளுமை உருவாக்கத்திற்கான வாழ்வுக் கல்வி என்றே புரிந்து கொள்ளப்படுகிறது. அதாவது கிறிஸ்துவின் மனநிலையுடன் இன்றைய சூழ்நிலைகளில் வாழ்வதற்குத் தேவையான சிந்தனை தெளிவையும், செயல் ஊக்கத்தையும், தரவேண்டும். இதனால் தான் மறைக்கல்வியானது சிறுவர்களுக்கு மட்டுமல்ல மாறாக பல்வேறு வாழ்க்கை பருவங்களுக்கும் அவற்றின் வேறுபடும் கடமைகளுக்கும் ஏற்ப வழங்கப்படும் கல்வியாக இன்று காணப்படுகின்றது.

ஆகவே மறைக்கல்வி என்றால் என்ன என்பது பற்றி மூன்றே வார்த்தைகளில் சுருக்கமாக விடையளிக்கலாம். சந்திப்பது, உருவாவது, உருமாற்றுவது

- ✶ அதாவது அனுபவங்களை, நிகழ்வுகளை காலத்தின் அறிகுறிகள் இவற்றின் மூலம் கடவுளை சந்திப்பது, இறையனுபவம் பெறுவது.
- ✶ கிறிஸ்துவின் எண்ணங்களை, சிந்தனைகளை, பண்புகளை, படிப்பினைகளை, மனநிலை-களை, மதிப்பீடுகளை சொல்லிலும் செயலி-லும் சுமந்து கிறிஸ்துவில் உருவாவது. அதன் மூலம் இறை நம்பிக்கையில் முதிர்ச்சி-யடைவது.
- ✶ கடவுளின் பிள்ளையாக நம்மை வெளிப்படுத்தி, இந்த உலகை சமூகத்தை இறையாட்சி சமூகமாக உருமாற்றுவது அதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வில் வளர்ச்சியடைவது

> **"மறைக்கல்வி என்கிற விசுவாச வாழ்வியல் கல்வி எல்லா உள்ளங்களையும், உளி போன்று செதுக்கி, அழகிய சிற்பமாக உருவெடுக்கத் துணை நிற்கிறது."**

ஆகவே மறைக்கல்வி என்பது எல்லா பருவங்களிலும் வழங்கப்படுகின்ற ஒரு நம்பிக்கை வாழ்வாகும். இதை கற்பிற்கும் ஆசிரியர் பெருமக்களே நல்ல மாதிரியாக, நல்ல வழிகாட்டியாக வரும் தடைகளைத் தகர்த்தெறிந்து கிறிஸ்துவின் மாதிரியாக மாறுங்கள், மாற்றுங்கள்.

# உண்மை உறைக்கும்



# உள்ளத்தை, வாழ்வை செம்மையாக்கும் செபம்

மனிதரின் மனத்தை இறைவன்பால் எழுப்புவது நம் அன்றாட செபம் ஆகும். எளிய இதயத்துடன் இறைவனைத் தேடி அவர் பாதம் பணிவது, அவர் பிரசன்னத்தில் வாழ்வது செபம். இறைவனுடன் நம் உறவை புதுப்பித்து அருள் வேண்டுவது செபம். அவர் முன் முழுமையாக சரணடைந்து அவர் மீது அன்புப் பெருக்குடன் அமைதியாக அமர்ந்திருப்பது செபம். இருந்தாலும் செபத்திற்கு ஓர் அடித்தளம் உண்டு அல்லவா? அதுதான் உள் வாழ்வு மாற்றமாகும். உள்ளத்தின் மாற்றம், வாழ்வின் மாற்றம், சிந்தனை, செயல் அனைத்திலும் மாற்றம், இவைகள் இருந்தால் நம்மையே ஆண்டவர் முன் ஒப்படைத்து வாழலாம். ஆகவே அவரைப் பின்பற்றி வாழ்ந்திட நாம் மாறுவதும் நம்மை மாற்றுவதும் செபமாகும். ஆலயத்திற்கு சென்று ஆண்டவரை வெறுமனமே பார்த்து வார்த்தைகளால் புகழ்ந்து பாராட்டி வணங்கினால் மட்டும் போதாது அவரைப் போல மாற, வாழ நல்ல உள்ளம், தூய இதயம் அதிகமான ஈடுபாடுள்ள வாழ்வு அவசியம். இதை பெறுவதே உண்மையான செபமாகும்.

இயேசுவின் வாழ்வில் செபம் பற்றி நற்செய்தி வரிகள் இதை அழகாக விபரிக்கின்றன. அந்நாட்களில் இயேசு வேண்டுவதற்காக ஒரு மலைக்குத் தனியாகப் போனார் (புனித லூக் 6:12) இயேசு தனிமையாக மலை உச்சிக்கு சென்று செபித்தார். ஒதுக்கமான இடத்திற்குச் சென்று செபித்தார். ஒடுக்கமான இடத்திற்குச் சென்று இறைவனை வேண்டினார். தனிமையான இடங்களில் அமைதியாகச் சென்று செபித்தார். தன் தந்தையை அப்பா என்று அழைத்து உறவாடிச் செபித்தார். ஆக, இயேசு செய்த செபத்தின் பெரும்பகுதி தனிமையில், ஒதுக்கமான இடங்களில் தந்தையுடன் நடந்த உரையாடல், உறவாடலாகும்.

தனிமையில் தனிமையான இடங்களில், எளிய சூழலில், ஓரமான மலை உச்சிகளில், விடியற்காலையில் கருக்கலோடு எழுந்து சென்று அவர் செய்த செபங்களைப்போல

எருசலேம் ஆலய ஆடம்பரச் செபம் அவரைத் தொடவில்லை என்பதே உண்மை, அவரது வாழ்வில் நாம் காண்பது; இறைவன் முன் தனிமையில் தன்னைப் பற்றிச் சிந்தித்தார்; இறை உரையாடலில் தன்மைப் பரிசோதித்தார்; இறை சித்தத்திற்குத் தம்மை, தம் வாழ்வை உட்படுத்தினார்; கையளித்தார்; மக்கள் பணிகளுக்காகத் தம்மைத் தயாரித்தார் என்பதாகும். அவரது அன்றாட செபம், வாழ்வில் ஒரு மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வழிநடத்தியது எனலாம். தம்மை, தாம் வாழும் சமுதாயத்தை, தம்மோடு வாழும் மக்களை உற்றுப் பார்த்துப் புது உரு கொடுக்கும் புதுமை முயற்சிகளுக்குப் புடமிட்டது எனலாம். ஆக, செபிக்கும் ஒரு மனிதரின் செபங்கள். சொற்கள், சிந்தனை, பார்வை, பயணம், தேடல், போதனை, எல்லாம் உள, வாழ்வு மாற்றத்தை நோக்கியதாக வேண்டும். நல்ல உள்ளம், மாறிய உள்ளம், பண்பட்ட உள்ளம்,எளிய உள்ளம், எளியவர்பால் ஈர்ப்புள்ள உள்ளம், அனைவர்பாலும் அன்புள்ள இதயம், ஆணவக் கலப்பில்லா உள்ளம், பகிரும் உள்ளம், அது சார்ந்த செயல்கள் அனைத்தையும், உறுதி செய்வதாக அமைய வேண்டும்.



ஆலயத்தில் காணிக்கை செலுத்த வரும்போது உன் சகோதர சகோதரிகளுடன் மனவருத்தம் இருப்பதாக நினைவு கூர்ந்தால் அங்கேயே அதை வைத்து விட்டுப்போய் முதலில் உறவை சரிசெய். நல்ல உறவை ஏற்படுத்து. பின்னர் காணிக்கையைப் பற்றியும் பலியைப் பற்றியும் ஆலயத்தைப் பற்றியும் சிந்திக்கலாம் என்றவர் இயேசு. செபம் செய்யக் கூடாது என்பதல்ல; அதற்கான பாங்கு, பண்பு, சூழல், மனநிலை, மாற்றம் வேண்டும் என்பதுதான் இயேசுவின் போதனை. தன்னிடமுள்ள அனைத்தையும் தாராளமாகத் தந்த ஏழை விதவையின் எளிய தாராள மனத்தை, பகிரும் உள்ளத்தை இயேசு வெகுவாகப் பாராட்டுகிறார். ஆணவக் கலப்பும் சுய விளம்பரமும் இறுகிப் போன இறுமாப்பும் இல்லாத பணிவுள்ள ஏழை ஆயக்காரனின் எளிய மனதே ஆண்டவன் சந்நிதிக்கு ஏற்படையது என்கிறார். எளிய மனத்தவரை பேறுபெற்றவராக்கினார். விண்ணரசை அவர்களுக்கு முழு உரிமையாக்கினார். எளிய மனம்கொண்ட சக்கேயுவை இறங்கி வா என்று சொல்லி அவர் இல்லம் சென்று மாபெரும் மாற்றத்தை, புதுத் திருப்பத்தை, புது வாழ்வினை, மீட்பை உறுதிசெய்கிறார். நல்ல செபத்தின் வெளிப்பாடுகள் அன்பு, உறவு, அமைதி, பகிர்வு, மன்னிப்பு, தாராள உள்ளம் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். இவை அனைத்தையும் உறுதி செய்யாத செபம், புது மாற்றம், புது வாழ்வு தராத செபம் ஒரு பூரண செபமன்று.

அன்னைத் தெரசாவுக்கு ஏழைகள்பால் அன்பு அதிகம் உண்டு. எளியவர்பால் அக்கறையும் அதிகம் உண்டு. ஏழைகள் மீதுள்ள அவரது அன்புக்கு அளவில்லை. தன் அன்றாடச் செபத்தில், எண்ணத்தில், ஏக்கத்தில், வாழ்வில், பணியில் ஏழைகளைத் தேடினார். நாடினார். அன்பு, உறவு கொண்டார். ஏழையர் மீது பற்றி எரியும் அவரது அன்பு அவரது செபமாக மலர்ந்தது. அவர்களுக்கு பணி செய்ய வேண்டுமென்ற ஆர்வமும் அதில் தம்மைக் கரைக்க வேண்டும் என்ற முழுமையான ஈடுபாட்டையும் அது தந்தது. அன்னையின் செபத்தின் அடித்தளமாய் மையமாய் அது மாறி நின்றது எனலாம். ஆகவே எமது செபங்களில் இவ்வாறு, செபத்தின் அடித்தளம் வாழ்வு, வாழ்வை மாற்றுவது, வாழ்வைச் செம்மைபடுத்துவது, வாழ்வை வழிபடுத்துவது, வாழ்வை நெறிப்படுத்துவது ஆகும். இது வாழ்வின் மாற்றத்தை உருவாக்குவது, வாழ்வின் வளர்ச்சியை உறுதி செய்வது எனலாம். வாழ்வில் புது மாற்றத்தை ஏற்படுத்தாவிடில் இச்செபத்தின் பயன் என்ன? என்ற கேள்வி எழுகிறது. வாழ்வு மாற்றம் பெற, மனம் தூயதாக, செயல்கள் செம்மையாகப் புதிய வசந்தத்தை நோக்கி நம்மை வழிநடத்தாத வழிபாடு சீர் செய்யப்பட வேண்டும். ஆகவே நம் வழிப்பாடுகள் செபங்கள், மனங்களை செம்மைப்படுத்துவதாக அமைத்துக் கொள்வோம். நிச்சயம் நம் வழிப்பாடுகள் இறைவன் விரும்பும் வழிப்பாடாக அமையும்.

# "மன்னிப்பு அளிப்பதன் மூலம் ஒற்றுமையை ஏற்படுத்துவோம்"

## தேசிய மறைக்கல்வி தினம் - 15.09.2019

இன்றைய சமூகத்தில் நிலவும் சுயநலம், பொறாமை, பேராசை ஆதிக்கப்போக்கு. விட்டுக்கொடுக்காத மனநிலை, பழிக்குப் பழி வாங்குவதில் தீவிரம் மனிதனை மனிதனிடமிருந்து பிரிக்கும் காரணிகளாக அமைகின்றன. அதன் விளைவாக மதக்கலவரம். இனக்கலவரம், சாதிக்கலவரம், மொழிக்கலவரம், கட்சிக்கலவரம், என சமுதாயமே பிளவுபட்டு நிற்கின்றது. மனிதன் மனிதனை மனிதனாக மதிக்கும் நிலையை மறந்து, மனித நேயத்தை தொலைத்துவிட்டு மனித இரத்தத்தைக் குடிப்பதற்குரிய வழிகளைத் தேடிப் பேயாய் அலைகிறான்.

ஒரு அறிஞர் கூறுவார் "மனிதன் தவறு செய்யும் போது மிருகமாகிறான். தவறு செய்வதிலிருந்து திருந்தி வாழ்கின்றபோது மனிதனாக மாறுகிறான், பிறர் செய்த தவறை மன்னிக்கும் போது புனிதனாகின்றான்". அத்தகைய புனிதத்துவ நிலையை அடைவதே தன்னுடைய சாயலாக மனிதனைப் படைத்த இறைவனின் நோக்கமாகும்.

அன்பே கடவுள். மானிடப் பண்புகளில் முதன்மையானது அன்பே. அன்பு சொல்லில் அல்ல செயலில் காட்டப்பட வேண்டும். அன்பு, மன்னிப்பு, இவை இரண்டும் இரு கண்கள் போன்றவை. மன்னிப்பு என்ற மருந்து கல்லான இதயத்தையும் கரைய வைக்கும். அன்புள்ள இதயம் மன்னிக்கும், மன்னிக்கும் மனிதனுக்கு அன்புள்ள மனிதர்கள் அதிகம். மானிடப் பண்புகளில் முதன்மையானது அன்பே. மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக அமைத்துக் கொள்ள வேண்டுமானால் அன்புதான் அதற்கு அடித்தளமாகிறது. அன்பு, ஈகை, இரக்கம், மன்னிப்பு, ஆறுதல் என அறவழியில் வாழ்ந்தால் அமுக்கி குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து நமது மடியில் தம் அருளை இறைவன் கொட்டுவார். "உங்கள் பகைவரிடம் அன்பு கூருங்கள் உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்" (மத் 5 : 44) இயேசுவின் இக்கூற்று, இன்றைய சூழ்நிலையில் மிகவும் சிந்திக்கப்பட வேண்டியவை. பல்வேறுபட்ட சூழல்களில், ஒரு சிலர் மேல் நமக்கு வெறுப்பு ஏற்படலாம். அத்தகைய வெறுப்பு உணர்வுகளை உடனுக்குடன் நம் இதயத்திலிருந்து அகற்றாவிட்டால் அது பெரும் சுமையாகி விடும். அங்கு அமைதி இருக்காது. தாவீது சவுலை கொல்லாமல் விடுகிறார். காரணம் சவுல் அபிஷேகம் செய்யப்பட்டவர் என்பதால். மனிதராக இருக்கும் அனைவரும் கடவுளின் சாயல். இறைவனின் குழந்தைகள் என்றும் இறை நம்பிக்கையை நம்மில் ஆழமாக பதிய வைக்கும்போது அங்கு பகைமையும் பழிவாங்கும் உணர்வும் இருப்பதில்லை.




மேதகு. ஜோசப் பொன்னையா, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர்

சுய நலத்தோடு வாழும்போது நம்மை நாமே அழித்துக் கொள்வது போலாகும். மாறாக அன்பினால் நாம் இணையும்போது நாம் இயல்பாக வாழ முடியும். தன்னைக் கொன்றவர்களையே மன்னிக்கும்படி இயேசு வேண்டியது ஒரு முன்னுதாரணம். பகைவருக்கு அன்பு, வெறுப்போருக்கு நன்மை, சபிப்போருக்கு ஆசி, இகழ்வோருக்கு செபம். இவைகள் இயேசு நமக்குக் கற்றுத்தரும் படிப்பினையாகும். இவைகள் கேட்பதற்கு மட்டும் இதமாக உள்ளது. ஆனால் அதை வாழ்வாக்குவதில்தான் நம்மில் பலருக்கு கடினமாக கசப்பாக உள்ளது. உடல் நலம் பெற வேண்டுமானால் கசப்பான மாத்திரையானாலும் சாப்பிடுவது போல வாழ்வை அர்த்தமுள்ளதாக்க வேண்டுமெனில் கசப்பாக இருந்தாலும் நல் வாழ்வுக்காக கடைப்பிடித்தே ஆக வேண்டும். நல்லோர் மேலும் தீயோர் மேலும் பெய்யும் மழை போல பக்தனுக்கும் பாவிக்கும் இறைவன் பரிவு காட்டுவது போல நண்பர்களுக்கும், பகைவர்களுக்கும் நமது அன்பு எட்ட வேண்டும். அன்பையும் மன்னிப்பையும் நடைமுறையில் செயல்படுத்த முன்வருவோம். அன்பு செய்யும் மனமிருந்தால் மன்னிக்கும் மனம் தானாகவே வரும். முகத்தில் எச்சில் துப்புகிறவனுக்குப் பரிசாக புன்னகையை அளித்தால் அவனே துடைத்து விடுவான். மன்னிப்பைக் கற்றுக்கொள்வான். மன்னி, மன்னிக்கப்படுவாய். நாம் எவ்வளவு மன்னிக்கிறோமோ, அவ்வளவுக்கு நமது நட்பும் உறவும் விரியும்.

# தேசிய மறைக்கல்வி தின வாழ்த்துச் செய்தி

மறைக்கல்வி, ஆண்டவர் இயேசு கொடுத்த கட்டளையிலிருந்து ஊற்றெடுக்கிறது (மத்.28:19-20). அது இயேசு ஆற்றிய இறைவாக்கு உரைக்கும் பணியின் தொடர்ச்சி. மறைக்கல்வியின் உயிர்நாடி கடவுளின் வார்த்தை. அதை மக்களுக்கு அறிவித்து அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி கிறிஸ்துவின் உயிருள்ள சாட்சிகளாக உருவாக்குதே மறைக்கல்விப் பணியின் நோக்கம். மனித வாழ்வில் பல பருவங்கள் உள்ளன. ஒவ்வொரு பருவங்களுக்கேற்ப கிறிஸ்தவ வாழ்வைப் பக்குவப்படுத்துவதுதான் மறைக்கல்வி. நல்ல மனிதர்களை உருவாக்கி திருச்சபையை கட்டியெழுப்பும் மாபெரும் பணியை ஆற்றிவரும் தேசிய மறைக்கல்வி நிலையம் வாழ்க! மென்மேலும் உங்கள் பணி சிறக்க வாழ்த்தி நிற்கின்றேன்.



அதி.வண. மனோகுமரன் நாகரட்ணம், தமிழ்ப்பிரிவு இயக்குனர், கொழும்பு உயர்மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பணியகம்.

# தேசிய மறைக்கல்வி தினத்தையொட்டி தேசிய மறைக்கல்வி நடுநிலைய இயக்குனரின் வாழ்த்து செய்தி



**அருட்பணி. பெனட் சாந்த, இயக்குனர், தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**

இலங்கையின் அனைத்து பாடசாலைகளிலும் சமய பாடத்திற்கென ஒரு பாடநேரத்தை வழங்கி அனைத்து மாணவர்களுக்கும் தத்தமது மறையை கற்றுக்கொள்வதற்கு பாடத்திட்டத்தை நிர்ணயித்து அத் திட்டத்திற்கேற்ப மறை பாடங்களை அலகுகளாகப் பிரித்து சமயப் பாடம் கற்றுக் கொள்வதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

பிள்ளைக்கு மறையைக் கற்பிப்பதானது எமது திருச்சபையில் காணக்கூடிய தொன்றாக இருக்கிறது. தொடக்கத்திலிருந்தே பங்குக் குழுமத்தை நோக்காகக் கொண்டு சிறுவர், வளர்ந்தோருக்கு மறையைக் கற்பிக்கும் செயற்பாட்டில் தாய் திருச்சபை ஈடுபட்டிருந்தது. சிறப்பாக இலங்கையிலே பாடசாலைகளை அரசு பொறுப்பேற்ற பின்னர் பங்கை அடிப்படையாகக் கொண்டு மறைபாடசாலைகள் வளர்ச்சி பெறுவதற்கு அனைத்து மறைமாவட்டங்களுக்கும் பொறுப்பாக இருக்கும் அனைத்து ஆயர்களும் அதிக சிரத்தை எடுத்து மறையைத் தத்தம் மறைமாவட்டங்களில் வளர்த்ததை - வளர்த்து வருவதைத் தெளிவாகப் பார்க்கிறோம்.

இயேசுவில் கொண்டுள்ள அன்பினால் அதிக அர்ப்பணிப்போடும் சுய விருப்பத்தோடும் பங்குகளிலே பிள்ளைகளுக்கு மறையை கற்பிக்கும் மறையாசிரியர்களின் அர்ப்பணிப்பு, உழைப்பு ஆகியவற்றை நன்றியோடு நினைத்து அவர்கள் அனைவருக்கும் இறையாசீர் உரித்தாகட்டும் என வாழ்த்துக்கிறேன். சௌகரியங்கள் இல்லாவிடினும் சில மறைமாவட்டங்களில் மரநிழலின் கீழ் மறையை கற்பிப்பதைக் காண்கிறோம். இன்றைய சமூகத்திலே விழுமியங்கள் மறைந்து ஒரு பயங்கர நிலை உருவாகிக்கொண்டிருப்பதை சமூக ஊடகங்களின் மூலம் பார்க்கிறோம், கேட்கிறோம். பிள்ளைகள் வளர்ந்து உருவாகின்ற குடும்பமாகிய சமூக ஒன்றியம் இன்று பிளவுபட்டுள்ளது. தமது பிள்ளைகளை மேன்மையான ஹீரோவாக்குவதற்கு - நட்சத்திரமாக்குவதற்கு, மேன்மையான அறிவு, ஆற்றல், மேன்மையான பிரசித்தமான நபராக மாற்றுவதற்கு அதிக சிரத்தை எடுத்து வாழும் பெற்றோரை இன்றைய யுகத்திலே பார்க்கிறோம். ஆனால் அவற்றையும் விட எமது கவனம் திரும்ப வேண்டியது எங்கே எனில், நற்பண்புகள், மனித பெறுமதிகள், பண்புகள், விழுமியங்கள் நிறைந்த பிள்ளைகள் உள்ள சமூகத்தை உருவாக்குதலில் ஆகும். இதற்காக பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டும்.

அன்று, மறைக்கல்வியினால் பிள்ளைகளின் வாழ்வை வெற்றியாக்குகின்ற ஒரு வாழ்க்கை முறை இருந்ததாக எமது முன்னோர்கள் பெருமையாக சொல்லியிருந்ததைக் கேட்டிருக்கிறோம். ஆயினும், இன்று எமது பிள்ளைகள் பார்க்கின்ற உலகம், ஒரு வேறுபட்ட உலகம். இன்று அறிவால் நிறைந்து வடியும் - உலகச் செய்திகளினால் நன்மை, தீமை இரண்டும் பரந்து விரிந்திருக்கும் சமூகத்தில் வாழுகின்ற பிள்ளையின் ஆன்மீகத்தை வலிமைப்படுத்தி இறை நம்பிக்கையினால், உண்மை, பொய்மையை உய்த்துணரும் திறமை கொண்ட பிள்ளைகளை உருவாக்குவதற்கு மறைபாடசாலை கல்வியில் ஒரு பெரும் போராட்டமே நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே நன்மையான பயனை பிள்ளைகள் பெற்றுக்கொள்வதற்கு மறைபாடசாலையில் ஓர் மாற்றம் ஏற்பட வேண்டும்.

இக் கருத்துக்களை மனதிற் கொண்டு மறையைக் கற்றல் மட்டுமன்றி தேர்ச்சியினால் பாடத்தில் பிரவேசித்து கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டிய இந்த யுகத்திலே மறையாசிரியர்கள் தம் பணியாற்ற வேண்டியுள்ளது. இன்று எமது கீழ்ப்பிரிவு வகுப்புகளிலே பிள்ளைகளுக்கு மறையறிவிற்காக பாடம் கற்பித்தல், செபம் கற்பித்தல் மற்றும் மனனஞ் செய்தல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்பாக 10-11ம் தர மாணவர்கள் க.பொ.த.சாதாரண தர தேர்வுக்கு முகம்கொடுப்பதற்கு ஆயத்தம் செய்யப்படுவதை பார்க்கக் கூடியதாக இருக்கிறது. இவற்றைப் பாராட்டுவதோடு சிறு பிள்ளைகள் செபங்களை மனனஞ் செய்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அவ்வாறே ஞானம் (அறிவு) அறிந்துகொள்ள வேண்டிய விடய உள்ளடக்கத்தை புரிந்து கொள்ள வேண்டும். இவற்றை எமது மறையாசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செய்கின்றனர். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். அது மறைபாடசாலையின் முக்கிய பணியாகும். இதனால் பிள்ளைகளின் வாழ்வை - வாழ்வு முறை கட்டியெழுப்பப்படும்போது திறமை விருத்தி செய்யப்படுகிறது. இதனால் நற்பண்புகளோடு வேரூன்றிய ஆழமான ஆன்மீகத்துடன் நல்ல இளைஞனாக, இளம் யுவதியாக சமூகத்தில் வாழ்வதற்கு நெறிப்படுத்தும் நிலை மறைப்பாடசாலை கல்வியில் நடைபெறுகிறது.

இந்த வாழ்க்கை மாற்றம் மறைபாடசாலை கல்வியினால் இடம் பெற வேண்டும். அவ்வாறு இடம் பெற்றால் எமது மறை பாடசாலை தனது வெற்றி இலக்கை அடைகிறது.

எமது இலங்கை நாடு இன்று பல்வித பிரச்சனைகளினால் உழன்று கொண்டிருக்கிறது. பாஸ்கா ஞாயிறு இடம்பெற்ற குண்டு வெடிப்பினால் இன, மத, ஒற்றுமை கடுமையாக பலவீனமடைந்துள்ளது. நன்மை - தீமை, நீதி - அநீதி, வாய்மை - பொய்மைக்கான வேறுபாடுகளைக் கண்டுணர முடியாத யுகமாக இன்று இலங்கை மாறியுள்ளது.

எனவே இத்தகைய சவால்களுக்கிடையே நீதி, நேர்மை, உண்மை, ஒற்றுமைக்காக குரல் எழுப்புவதற்கான பின்னணியுடன் கூடிய எமது மனசாட்சியை பிள்ளைகளிடையே உருவாக்க வேண்டும்.

எமது மறையாசிரியர்களுக்கு விண்ணரசின் பண்புகளுடன், காலத்தின் அறிகுறியையும் அறிந்து நற்செய்தியின் ஒளியில் பிள்ளைகளுக்கு அவற்றை விளக்கும் திறமை தேவை. இதனால் மேன்மையான எமது கிறிஸ்தவ மறையினால் ஊட்டம் பெற்று பிறரை மன்னித்து அவர்களை ஏற்று ஒற்றுமையை வளர்ப்பதற்கு தேசிய மறைக்கல்வி ஞாயிறு எமக்கு விழிப்புணர்வைத் தரட்டும்.

# மறைக்கல்வி தினத்தையொட்டிய வாழ்த்து செய்தி



**அருட்சகோதரி P. ரஞ்சி, தமிழ் பிரிவு பொறுப்பாளர், தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**

**இறையாட்சியானது ஒரு இடத்தையோ, காலத்தையோ மையப்படுத்தியது அல்ல. மாறாக மக்களின் வாழ்வில் கடவுள் அன்றாடம் செயற்படுவதைக் குறிக்கிறது.**

இன்று தேசிய மறைக்கல்வி தினமாகும். இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களிலும் மறைபணியாற்றி வரும் எமது மறையாசிரியர்களை இந்த சிறப்பான நாளிலே வாழ்த்துகிறேன். இவர்களின் தன்னலமற்ற இந்த அன்பின் பணிக்காக - இயேசுவை மற்றவர்களுக்கு - குறிப்பாக பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்ற ஆன்ம வாஞ்சைக்காக - அந்த வாஞ்சையினால் உந்தப்பட்டு ஆற்றும் பணிக்காக தலைசாய்த்து உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

மறைக்கல்வி பணி என்பது வெறும் சாதாரண பணி அல்ல. இது உன்னத பணி. தன்னலமற்ற பணி. இயேசுவின் மீட்புப் பணியில் பங்கேற்கும் பணி. காரணம் கத்தோலிக்க திருச்சபையின் உயிர்நாடியாக இருப்பதே இந்த மறைக்கல்வி தான். திருப்பலியும் திருவழிபாடும் நடைபெற முடியாத இடங்களில் கூட நடைபெறும் திருச்சபையின் உன்னதமான ஒரு பணிதான் மறைக்கல்விப் பணி. இந்த மறைக்கல்வியின் மகத்தான நோக்கங்கள் மூன்று. அவை இயேசுவை அறிந்து கொள்வது - இயேசுவை அனுபவிப்பது - இயேசுவை அறிக்கையிடுவது (போதிப்பது). ஆகவே அவரை அறிய, அனுபவிக்க, அறிக்கையிட இந்த உன்னத நோக்கம் தான் நம்மை உந்தித் தள்ளும் உயர்ந்த சக்தியாக உள்ளது.

இயேசுவின் இந்த பணி தந்தையிடமிருந்து செயற்பட்டு புதுப்பிக்கப்படுகிறது. இயேசுவின் பணி போதிப்பதும் நற்செய்தியாக மாறுவதும் ஆகும். அவர் தம் பணியை ஒரு இறைவாக்கினராக - குருவாக - மேய்ப்பராக இருந்து நிறைவேற்றினார். இயேசுவின் பணி, இறையாட்சியை மையமாகக் கொண்டிருந்தது. இறையாட்சியானது ஒரு இடத்தையோ, காலத்தையோ மையப்படுத்தியது அல்ல. மாறாக மக்களின் வாழ்வில் கடவுள் அன்றாடம் செயற்படுவதைக் குறிக்கிறது.

இறைவார்த்தையை அறிவிக்கும் மாபெரும் பணியை ஏற்றுள்ள திருச்சபை இவ்வுலகில் காணும் பல்வேறு கலாச்சாரங்களுடனும், மதங்களுடனும் சமூகத்துடனும் ஏழைகளுடனும் மொத்தத்தில் படைப்பு முழுமையோடும் உறவாட அழைக்கப்படுகிறது. நற்செய்தி அறிவிப்பின் அடிப்படையே இறைவாக்குப் பணியாகும். நற்செய்தி அறிவித்தல் என்பது திருச்சபையின் எல்லா பணிகளையும் உள்ளடக்கியது. எனவே இந்த மறைக்கல்விப் பணி என்பது இயேசுவுடன் நெருங்கிய உறவும் முதிர்ச்சியான நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்வதுமாகும்.

இறைவார்த்தையை மாணவர்களின் உள்ளங்களிலே விதைப்பதற்கு ஆசிரியர்கள் எவ்வளவுதான் முயற்சித்தாலும் சில வேளைகளில் தோற்றுப்போவதற்குக் காரணம் காலத்தின் கோலம்தான்.

நமது பிள்ளைகள் இன்று இந்த சிக்கலான கால கட்டங்களில் மனம் தளர்ந்துபோய் வழியோரங்களிலும், கற்பாறையின் மீதும், முட்புதரிலும் விழுந்த பிள்ளைகளாகத் தங்கள் வாழ்வை உணர்கிறார்கள். ஒரு பாடத்தை தெளிவாக, வேகமாக புரிந்துகொள்ள தொலைத்தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இச் சாதனங்கள் மக்கள் தமது அனுபவங்களைப் பகிரவும் புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளவும் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே மறைக் கல்வியின் வளர்ச்சிக்கு ஊடகம் சிறப்பான பங்களிப்பை ஆற்றுகிறது. ஒலி - ஒளி பதிவுகள் வாழ்வியல் உண்மைகளை வெளிக்கொணர்ந்து அவ்வுண்மைகளோடு நாம் உறவாட நமக்குத் தளம் அமைத்துத் தருகிறது. அதே வேளை, அத்துமீறிய நுகர்வு கலாச்சாரமும் தொழில் நுட்ப வளர்ச்சிகளும் இணையத்தளத்தில் பரந்து விரிந்து கிடக்கும் ஆபாசங்களும் வக்கிரங்களும் இன்று எண்ணில் அடங்கா. சமூக ஊடகங்களும் அதன்மேல் உள்ள ஈர்ப்பும் மனித இனத்தையே குறிப்பாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை அசுர வேகத்தில் சீரழித்துக் கொண்டு வருகிறது. அதனால் மறைக்கல்வியின் அவசியமும் தாக்கமும் முன் எப்போதையும் விட இப்போது மிகவும் அவசியமாக உள்ளது. மறைக்கல்வி என்பது ஆரம்பமும் அடித்தளமும் தான். ஆனால் அது இருளின் பயத்திலிருந்தும் சாவின் நிழலிலிருந்தும் நம் பிள்ளைகளை விடுவித்து கைதூக்கிவிட வல்லது.

இந்த உண்மையை நம் குழந்தைகளுக்கு உணர்த்துவது அனைத்து பெற்றோரினதும் மறையாசிரியர்களினதும் கடமையாகும். ஆகவே பெற்றோரே பிரத்தியேக வகுப்புகளுக்கு மட்டுமன்றி மறைக்கல்விக்கும் மற்றும் ஆன்மீக தேவைகளுக்கும் நிகழ்வுகளுக்கும் பிள்ளைகளின் நேரத்தை ஒதுக்குங்கள். மறைக்கல்வி வெறும் பரீட்சைக்காக மட்டுமல்ல. மாறாக பிள்ளைகளின் வாழ்க்கைக்காகவாகும். எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக - நல்ல கிறிஸ்தவர்களாக - இயேசுவின் பண்புகள், விழுமியங்களுடன் வாழ்வதில் அவர்கள் இன்று கற்கின்ற மறைக்கல்வி மாபெரும் பங்காற்றுகிறது.

எனவே எமது மறைக்கல்வியானது,

**கிறிஸ்துவை அறிந்துகொள்வதற்கு மட்டுமன்றி அனுபவிப்பதற்கும் உதவட்டும்.**

**பழிவாங்கும் உணர்வை விடுத்து பாசகரம் நீட்டுவதற்கு உதவட்டும்.**

**கோப உணர்வை தணித்து அன்பு அரசாள உதவட்டும்.**


**கிறிஸ்தவ விழுமியங்களுடன் எமது பிள்ளைகள் வாழ்வதற்கு வழிசமைக்கட்டும்.**

மொத்தத்தில் கிறிஸ்தவ பண்புகளை வளர்த்து இன்னொரு கிறிஸ்து + அவன் ஆக, கிறிஸ்து + அவள் ஆக வாழ வழிசமைக்கட்டும்.

**மறையாசிரியர்களே! உங்களுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துக்கள்.**

## புரட்டாதி 14

# திருச்சிலுவையின் மகிமை!



சிலுவைக்கு ஒரு விழாவா? என்று சிலர் எண்ணலாம். ஆம், இது எல்லா விழாக்களையும் விட மிக முக்கியமான விழா. ஏனென்றால் ஒரு மரத்தினால் இழந்த வாழ்வை ஒரு மரத்தினாலேயே பெற்றுக்கொண்டோம். வான்வீட்டின் வழிகாட்டி சிலுவை விண்ணக வாசலின் திறவுகோல் சிலுவை! கிறிஸ்தவர்களின் புனித அடையாளம்! நம் மீட்பின் சின்னம்! கடவுளின் பேரன்பின் உச்சக்கட்ட அடையாளம்! ஆபத்தில் பாதுகாக்கும் கேடயம்! மகிமையின் அடையாளம்! சிலுவை, பாடுகளைத் தராது! துன்பங்களை நீக்கும் பேராயுதம்! வெற்றியின் சின்னம்...! என்று இன்னும் எத்தனையோ சிலுவையைப் பற்றி கூறிக்கொண்டே போகலாம். ஆனால், இன்றும் கூட சிலுவையைக் கண்டு சிலர் அஞ்சுவதைக் காணலாம். தங்கள் வீடுகளில் வைத்திருப்பதை கூட விரும்புவதில்லை. இங்கு நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

"ஒரு நாள் காலை என் கணவர் காலை 6 மணி திருப்பலிக்குச் சென்றுவிட்டு வெளியே வரும்போது ஒரு சிலுவை கீழே கிடந்ததாக என்னிடம் காட்டினார். நானும் வாங்கிப் பார்த்துவிட்டு அவரிடமே திருப்பிக் கொடுத்தேன். அதைத் தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டார். அப்பொழுது என் உறவினர் ஒருவர் என் கணவரைப் பார்க்க வந்தார். இரண்டு வீதிகள் தள்ளி அவர் வீடு உள்ளது. அரசு வேலையில் உள்ளவர்தான். வேலைக்குப் போவதற்கு முன் சும்மா உங்களைப் பார்ப்பதற்காக வந்தேன் என்றார். அவருடன் பேசிக்கொண்டிருந்த என் கணவர் "இதோ பாருப்பா, ஒரு சிலுவை காலையில் திருப்பலி முடிந்து வரும்போது கீழே கிடந்தது. இதை நீ வைத்துக்கொள். இந்தச் சிலுவையில் மரித்து உயிர் பெற்றவர் உனக்கு எல்லா நேரத்திலும் உதவியாக இருப்பார்" என்று கூறி சிலுவையை அவரிடம் கொடுத்தார். ஆனால் அவர் உடனே "ஐயோ! இந்தச் சிலுவையை எல்லாம் என்னிடம் கொடுக்காதீர்கள். எனக்கு வேண்டாம். என் வாழ்க்கையில் எனக்கு வரும் சிலுவைகளே ஏராளம். அதுல இது வேறயா?" என்று மறுத்துவிட்டு, நான் கொண்டு வந்து கொடுத்த காபியைக் குடித்து விட்டுச் சென்று விட்டார். என் கணவர் என்னிடம் கூறினார் "இதோட மகிமை தெரியாமல் உதாசீனம் பண்ணிவிட்டு போகிறான் பார்" என்று. ஒரு மணி நேரம் கடந்திருக்கும் நான் காலை உணவுக்கு ஏற்பாடுகள் செய்து கொண்டு இருந்தேன். அப்பொழுது என் மகனின் நண்பன் ஓடிவந்து, காலையில் எங்கள் வீட்டிற்கு வந்தவரின் பெயரைச் சொல்லி அவர் லாரியில் அடிபட்டுக் கிடக்கிறார் அப்பா. பயங்கரக் கூட்ட நெரிசல். போக்குவரத்தும் தடைபட்டு விட்டது. சீக்கரம் வாருங்கள் என்று சொல்லி, அவனது இரண்டு சக்கர வாகனத்தில் வைத்து கூட்டிச் சென்றான். அங்கு குற்றுயிராக, லாரி சக்கரத்தில் இழுத்துச் செல்லப்பட்டு உடம்பில் ஒரு துணி கூட இல்லாமல் உள்ளாடை ஒன்று மட்டும் இருக்க, அலங்கோலமாக கோலத்தில் உயிர் ஊசலாடக் கிடந்தார். பின் அங்கிருந்தவர்கள் மற்றும் காவல்துறையினரின் அனுமதியோடு அரசு மருத்துவமனைக்கு அள்ளிச் சென்றிருக்கிறார்கள். ஆனால், மருத்துவர்கள் வந்து பார்ப்பதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. வியப்பும், திகைப்பும், துக்கமும், துயரமும் நெஞ்சடைக்கும் வேதனையும் என்னை விட்டு அகல ஒரு வாரம் ஆயிற்று. நான் நினைத்தேன் "கொடுத்த சிலுவையை வாங்கி சட்டைப் பையில் வைத்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காதோ?" என்று. உண்மைதான். சிலுவை ஆபத்தில் பாதுகாக்கும் கேடயம். பாடுகளையும், துன்பங்களையும் நீக்க வல்லது.

அன்று இஸ்ரயேல் மக்கள் பாலைவனப் பயணத்தின்போது மோசேக்கும் கடவுளுக்கும் எதிராகக் கிளர்ந்தெழுந்தார்கள். இதனால் கடவுள் அவர்கள்மீது சினம் கொண்டு கொள்ளிவாய்ப் பாம்புகளை அனுப்பி சாகடிக்கிறார். ஆனால், மோசே மீண்டும் அம்மக்களுக்காக கடவுளிடத்தில் மன்றாடுகிறபோது அவர்கள்மீது இரக்கம் கொண்டு "வெண்கலப் பாம்பு ஒன்றைச் செய்து, அதனை மக்கள் நடுவே வை. அப்போது பாம்பினால் கடிபட்ட எவரும் அதனைப் பார்க்கிறபோது உயிர் பிழைப்பார்கள்" என்று மோசேயிடம் கூறினார். மோசேயும் அவ்வாறே செய்ய, இஸ்ரயேல் மக்கள் உயிர் பிழைக்கிறார்கள். இங்கு வெண்கலப் பாம்பு திருச்சிலுவையின் முன் அடையாளமாக இருக்கிறது. வெண்கலப் பாம்பைப் பார்த்தவர்கள் வாழ்வு பெற்றது போல திருச்சிலுவையைப் பார்ப்பவர்கள் வாழ்வு பெறுவார்கள்.

பொதுவாக சிலுவை மரணம் மிக இழிவாகக் கருதப்பட்டது. இது கொடியவர்களுக்கும், கொலை, கொள்ளைக்காரர்களுக்கும், நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கும் தான் வழங்கப்படும். ஆனால், அப்படிப்பட்ட சிலுவைச் சாவை இறைமகன் நம்மீது கொண்ட அன்பினால் மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறார்.

"சிலுவை யூதர்களுக்குத் தடைக்கல்லாகவும், பிற இனத்தார்க்கு மடமையாகவும் இருந்தது" (1 கொரி 1:23). ஆனால், நமதாண்டவர் இயேசுவின் பாடுகள் மற்றும் உயிர்ப்பின் வழியாக அதனை வெற்றியின் சின்னமாக மாற்றிவிட்டார். எனவே, நாம் நமக்கு வரும் பாடுகளையும், துன்பங்களையும், பற்றாக்குறை, கடன் தொல்லைகள், நோய் வருத்தங்கள், இயற்கைப் பேரிடர்கள் அனைத்தையும் பொறுமையாக ஏற்றுக்கொண்டு, அனைத்தையும் இயேசுவின் பாடுகளோடு சேர்த்து இறைவனுக்கு ஒப்புக்கொடுப்போம். ஆன்மாக்களை மீட்போம். எல்லாவற்றையும் நமது நித்திய வாழ்விற்கு ஏதுவாக மாற்றிக் கொள்வோம். "சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே! அனைவரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களைத் தேற்றுவேன்" என்று சொன்ன இயேசு நமது வாழ்க்கைச் சிலுவைகளிலிருந்து நம்மை தேற்றமாட்டாரா? என்ன? எனவே, வாழ்வில் நமக்கு வரும் துன்பச் சிலுவைகளைக் கண்டு துவண்டு விடாமல், நம்பிக்கையோடு அவை நமக்கு மீட்பைத் தரவல்லது என்கிற உணர்வோடு ஏற்றுக்கொள்வோம்.

சிலுவை நம் இறைவன் விண்ணையும், மண்ணையும் இணைக்கப் பயன்படுத்திய பாலம். மனிதனையும், இறைவனையும் இணைத்தது இச்சிலுவையே. இச்சிலுவையில் இயேசு உயர்த்தப்பட்டபோது தான் அன்பு, தியாகம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல் இவற்றின் உண்மை முகம் உலகுக்கு உயர்த்திக் காண்பிக்கப்பட்டது. இக்குணங்களை நாமும் ஏற்று, நாள்தோறும் நமக்கு வரும் சிலுவைகளை பொறுமையோடு சுமந்தால் இயேசுவைப் போல் நாமும் உயர்த்தப்படுவோம் என்பதை நினைவுறுத்தத்தான் இந்த விழா.

# 200வது ஆண்டில் கால்பதிக்கும் கொழும்பு புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா ஆலயம்.



இன்று இலங்கைத் திருநாட்டின் தலைநகராம் கொழும்பு மாநகரில் புதுப்பொலிவுடன் திகழும் புனித வியாகுல அன்னை ஆலயமானது 2020ம் ஆண்டுடன் 200 ஆண்டுகால வரலாற்றையும், பாரம்பரியத்தையும் தன்னகத்தே கொண்டது. இவ்வாலயமானது மகத்தான பாரம்பரிய வரலாற்றினை கொண்டதாகும். அதுமட்டுமல்லாது உயரிய பங்கு வளர்ச்சியினையும் தன்னகத்தே கொண்டதாக விளங்குகிறது. அன்னையின் கண்ணீர் செந்நீரானாலும், மக்களின் அன்னையாகியதன் காரணத்தால் தான் கிருபாசனங் கொண்டெழுந்தருளியுள்ள ஆலயத்தின் மக்களது ஆன்மீக நலன்கள் பலுகிப் பெருகி, இறையாசீர் நிறைந்தது, சிறந்து விளங்கிடக் காரணியானார்.

கொழும்பு மாநகரின் எல்லைப்புறமாக அன்று கணிக்கப்பட்ட பேலிய கொடைப்புகுதியிலே 1800களில் இந்திய வம்சா வழியினராகிய செட்டிச் சமூகத்தினர் சிறுதொகையினராக வாழ்ந்து வந்தனர். பேலியகொடையில் ஏற்பட்ட சனப்பெருக்கத்தின் காரணமாக இவ் செட்டி சமூகத்தினர் கொட்டாஞ்சேனை வட்டாரத்தில் குடியேறினார்கள்.


கோவா மாநிலத்தில் "ஒரட்டோரியன்" சபையினர் இம்மக்களின் ஆன்மீகத் தாகம் கண்டு, பரிபாலித்ததன் விளைவாக 1820ல் இலத்தீன் மொழியிலே "மாட்டர் டொலறோசா" என பெயரிடப்பட்டு, தமிழ் மொழியிலே "வியாகுல அன்னை" என அழைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இவ்வாலயத்தின் அதி உன்னத சிறப்பு யாதெனில் ஒரு ஆண்டுகள் தற்காலிக மேற்றிராசனமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இயங்கி வந்ததாகும். காரணம் 1873ல் முன்னைய புனித லூசியாள் ஆலயம் இடிக்கப்பட்டு, தற்போது கம்பீரமாக காட்சி அளிக்கும் பேராலயம் கட்டப்பட்டதாகும்.

கொச்சிக்கடை பகுதிவாழ் மக்களின் தனிப்பங்கு கோரிக்கையை ஏற்ற, அன்றைய பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை 1990ம் ஆண்டு ஆடி 15ல் கொழும்பு மறைமாவட்டத்தின் 105வது பங்காக புனித வியாகுல அன்னை ஆலயத்தினை பிரகடனம் செய்தார்.

அன்று முதல் இன்று வரை அருட்பணி. றெஜினோல்ட் லூசன் அ.ம.தி அடிகளார், அருட்பணி. ஆனந்த பர்னாந்துபுள்ளே அடிகளார், அருட்பணி. நியூமன் முத்துத்தம்பி அ.ம.தி அடிகளார், அருட்பணி. இக்னேசியஸ் வர்ணகுலசிங்கம் அடிகளார், அருட்பணி. அன்டனி மார்சிலியார் அ.ம.தி அடிகளார், ஆகியோர் பங்கிலே பங்குத்தந்தையாக சிறப்பாக பணியாற்றியுள்ளனர். இவர்களின் சிறப்பான வழிநடத்தில் பங்கு மாபெரும் எழுச்சி பெற்றுள்ளதை பங்குமக்கள் அனைவரும் அறிவர்.

இறுதியாக அதி.வண. அருட்பணி. மனோகுமரன் நாகரட்ணம் அடிகளார் எமது பங்கினை வழிநடத்தி வருகின்றார். அவரது வழிநடத்தலின் கீழ் 200வது ஆண்டை சிறப்பிக்கவுள்ளோம். அதன் ஆரம்பமாக இம்மாதம் 25ம் திகதி மாலை 6.00 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். ஒவ்வொரு நாளும் மாலை 6.00 மணிக்கு நவநாட்கள் நடைபெறும். தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடைபெறும். மறையுரைகளை வழிநடத்த தமிழில் அருட்பணி. செபஸ்தியன் இருதயராஜ் அடிகளாரும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## பொதுக்காலத்தின் 24வது ஞாயிறு (15.09.2019)

**▸▸ பேதுரு ◂◂**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 24வது ஞாயிறு வழிபாட்டில் பங்குகொள்ள வந்திருக்கும் அன்பின் இறைமக்களே மனிதர்களாகிய நாம் அனைவரும் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்றே விரும்புகின்றோம். இறைவனின் படைப்புக்கள் வழியாகவும் மனித ஆற்றல்களின் கண்டுபிடிப்புக்கள் மூலமாகவும் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். இவ்வுலகில் நாம் அனுபவிக்கின்ற மகிழ்ச்சியெல்லாம் உண்மையான மகிழ்ச்சி என இன்றைய நற்செய்தியில் வரும் மூன்று உவமைகளும் நமக்கு எடுத்துரைக்கின்றன. இந்த மகிழ்ச்சியை அடைய மனமாற்றம் அவசியம். “மனம்மாறுகின்ற ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் தூதரிடையே மகிழ்ச்சி உண்டாகும்”. நீதிமான்களால் மட்டுமல்ல மனம் திரும்புகின்ற ஒரு பாவியின் மூலமும் விண்ணுலகும் மண்ணுலகும் மகிழ்ச்சியால் இணைகின்றன. போலியான பொய்யான மகிழ்ச்சிக்காக அலையும் நாம் ஆணவத்தாலும் அகங்காரத்தினாலும் அடுத்தவரை அன்பு செய்யாமலும், ஏற்றுக் கொள்ளாமலும், மன்னிக்காமலும் வாழ்ந்து வருகின்றோம். எனவே உண்மையான மனமாற்றம் பெற்று மகிழ்ச்சியாக வாழ இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : வி.ப 32:7-11,13-14**

ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக் கொண்டு தம் மக்களுக்கு செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டு விட்டார்.

**பதிலுரைப் பாடல் :**

நான் புறப்பட்டு என் தந்தையிடம் போவேன்.

**இரண்டாம் வாசகம் : 1 திமொ 1:12-17**

பாவிகளை மீட்க கிறிஸ்து இயேசு இவ்வுலகிற்கு வந்தார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! கடவுள் கிறிஸ்து வாயிலாக உலகினரைத் தம்மோடு ஒப்புரவாக்கினார். அந்த ஒப்புரவுச் செய்தியை அவரே எங்களிடம் ஒப்படைத்தார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 15:1-32**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாழும் திருஅவையானது தம் மக்களின் விண்ணகப் பயணத்தில் மனமாற்றத்தின் ஊடாக மகிழ்ச்சியை உருவாக்க இறைமக்கள் அனைவருக்கும் என்றும் வழிகாட்டவும், திருஅவையின் ஆட்சிப் பீடம் மண்ணுலகில் சிறப்பாக செயல்படவும் ஒப்புரவு அருட்சாதன மகிழ்ச்சியை அனைவருக்கும் வழங்கவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

நாட்டு மக்களுக்கு நிலையான மகிழ்ச்சியை வழங்க தலைவர்கள் அனைவரும் சுயநலன் அகற்றி பொதுநலன் பேணவும், நீதியும் அன்பும் மனிதநேயமும் கொண்ட மறுமலர்ச்சியை உருவாக்கும் பணியில் ஈடுபடவும், பழிவாங்கும் மனநிலையை அகற்றி மன்னிக்கும் மனநிலையை உருவாக்கி அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழ வழிகாட்டவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

நாம் இருக்கின்ற நிலையோடு பாவிகளாகிய நம்மை இறைவன் ஏற்றுக் கொள்ளுகின்றார். பாவிகள் மீட்படையவே மனுமகன் நம்மைத் தேடி வந்தார். இதை உணரும் நாம் ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக்கொள்ளவும், உறவுகள் நிலைப்பட உண்மையான மன்னிப்பை வழங்கவும், அனைவரும் மகிழ்ச்சியாக வாழும் நல்ல மனச்சான்றை உருவாக்கவும் வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 25வது ஞாயிறு (22.09.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 25வது வாரத்தின் திருவழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் அன்பு நெஞ்சங்களே, இறைமக்களே, கருவறை முதல் கல்லறை வரைக்கும் சில்லறை தேவை, ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசிருந்தால் வாங்கலாம், காசேதான் கடவுளப்பா என்று சிந்திக்கின்ற காலகட்டத்தில் வாழும் நமக்கு இன்றைய வாசகங்கள் பொருளாதார செல்வங்களை இழந்து, அருள் செல்வங்களை நமதாக்கிக் கொள்ள வழிகாட்டுகின்றன. நாம் வாழும் சமூகத்தில் செல்வங்களால் அநீதி, பெருகி, நீதி மடிந்து கிடக்கின்றது. இந்த அழியக்கூடிய செல்வங்களை விடுத்து அழியா அருட்செல்வமாகிய கடவுளை எப்படிப் பற்றிக்கொள்ள முடியும் என்பதை வாசகங்கள் எடுத்துரைக்கின்றன. நாம் முன்மதியோடு செயல்பட்டால் கடவுளிடம் கணக்கு ஒப்படைக்கும் நேரம்வரும்போது நாம் அஞ்சத் தேவையில்லை. இறைவன் நாம் சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சக்தியை நமக்குத் தந்து நாம் அவருடைய விருப்பத்திற்கேற்ப முன்மதியோடு செயல்பட அழைக்கின்றார். இறைவனின் அழைப்பையும், நமது பொறுப்பையும் உணர்ந்தவர்களாக நமக்காகவும் பிறருக்காகவும் செபித்து வாழ இறையருள் வேண்டிடப் பலியில் இணைவோமாக.

**முதல் வாசகம் : ஆமோஸ் 8:4-7**

வெள்ளிக் காசிற்கு ஏழைகளையும் இரு காலணிக்கு வறியோரையும் வாங்கலாமா?

**பதிலுரைப் பாடல் :**

ஏழைகளை தூக்கிவிடும் ஆண்டவரைப் போற்றுங்கள்.

**இரண்டாம் வாசகம் : 1 திமொ 2:1-8**

எல்லா மனிதரும் மீட்புப் பெறவும், உண்மையை அறிந்துணரவும் வேண்டுமெனக் கடவுள் விரும்புகிறார்.

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து செல்வராயிருந்தும் அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு உங்களுக்காக ஏழையானார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 15:1-13**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

இறைவிருப்பத்தை எப்பொழுதும் நிறைவேற்றித் தன் இருப்பை இவ்வுலகில் நிலைநிறுத்த அயராது உழைக்கும் திருஅவையும், அதன் பணியாளர்களும் உலகத்தின் போக்கையும் செயற்பாடுகளையும் நன்கு உணர்ந்தவர்களாக இறைமக்களின் சுதந்திர உணர்வை எப்பொழுதும் மதித்து நேரிய வழியில் உழைத்திட வரமருள வேண்டுமென்று...

சுயநல உணர்வினால் குழம்பிப் போயிருக்கும் எமது நாட்டின் அரசியல் சீர்படுத்தப்பட்டு மக்களின் சுதந்திர உணர்வை மதித்து தன்னலமற்ற தூய அரசியலை உருவாக்கி சமதர்ம சமுதாயம் உருவாக அர்ப்பணிப்புடன் உழைக்கும் ஆர்வத்தை வழங்கி வழிநடத்தியருள வேண்டுமென்று...

கிறிஸ்தவ மக்களாகிய நாமனைவரும் தனித்திரு, பசித்திரு, விழித்திரு, செபித்திரு என்பதற்கேற்ப இறைவனுக்காக வாழ சகோதர அன்பில் நிலைத்து வாழவும், முன்மதியோடும் விவேகத்தோடும் நடந்து பணக்காரர்களை வெறுத்து ஒதுக்காமல் அவர்களையும் அன்பு செய்து வாழ வரமருள வேண்டுமென்று...

## பொதுக்காலத்தின் 26வது ஞாயிறு (29.09.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 26வது ஞாயிறு தினத்திலே இறைவனை வழிபட இறையாலயம் வந்திருக்கும் அன்பின் இறைமக்களே! இன்று நமக்கு தரப்பட்டுள்ள வாசகங்கள் கிறிஸ்தவர்களின் அடையாளம் பணமா? பாசமா? என்று சிந்திக்க அழைக்கின்றன. இயேசு இன்று ஒரு சிறந்த உவமையின் வாயிலாக நம்மோடு பேசுகின்றார். கல்லும் கரையக்கூடிய தோற்றத்தில் தன் வீட்டின் வாயில் அருகே அமைந்திருந்த ஏழை லாசருக்கு ஒரு பிடி உணவு கொடுக்க மனமில்லாத அந்தப் பணக்காரன் நிலையை நமக்குச் சொல்லி, இரக்கமில்லாதவன் இறந்ததும் எப்படிப்பட்ட நிலையை அடைவான் என்று சுட்டிக் காட்டுகின்றார். இதைத்தான் இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் ஆமோஸ் “சீயோன் குன்றின் மீது இன்பத்தில் திளைப்போரே, மக்களினங்களுள் சிறந்த இனத்தின் உயர்குடி மக்களே! உங்களுக்கு ஐயோ கேடு!” என்று கூறுகின்றார். சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டு கவனிப்பாரற்று இருந்த மனிதன் மிகவும் முக்கியமான மனிதனாக மாறுவதை நாம் பார்த்திருக்கின்றோம். ஒதுக்கப்பட்ட கல்லே மூலைக் கல் ஆவதையும் அறிந்திருக்கின்றோம். எனவே விண்ணுலகில் ஆண்டவன் அருகில் அமர மண்ணுலகில் வாழ்வை நினைத்துப் பார்க்க இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : ஆமோஸ் 6:1,3-7**

கிடையிலிருந்து வரும் ஆட்டுக்குட்டிகளையும் மந்தையிலிருந்துவரும் கொழுத்த கன்றுகளையும் உண்போருக்கு ஐயோ கேடு.

**பதிலுரைப் பாடல் :**

என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு

**இரண்டாம் வாசகம் : 1 திமொ 6:11-16**

நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்து தோன்றும் வரையில் கட்டளையை அப்பழுக்கின்றி கடைப்பிடித்து வா

**நற்செய்திக்கு முன் வசனம் :**

அல்லேலூயா, அல்லேலூயா! நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து செல்வராயிருந்தம் அவருடைய ஏழ்மையினால் நீங்கள் செல்வராகுமாறு உங்களுக்காக ஏழையானார் அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 16:19-31**

### விசுவாசிகளின் மன்றாட்டு

எல்லாம் வல்ல இறைவா! எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

விண்ணக வாழ்விற்குத் தேவையான மனநிலையை தன் மக்களிடையே உருவாக்க உழைத்திடும் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர், துறவியர் ஆகிய அனைவரும், ஏழையரின் உள்ளத்துடனும் ஏழ்மையான மனநிலையோடும் இறைமக்கள் வாழ்ந்திட அயராது உழைக்கும் ஆர்வத்தை அளித்தருள வேண்டுமென்று...

நாட்டிற்கும் மக்களுக்கும் பணநாயகமல்ல ஜனநாயகமே தேவை என்பதை உணர்ந்தவர்களாக நமது தலைவர்கள் உழைக்கவும், பணத்தின் மீது பேராசை கொண்டு ஏழை எளியவர்களைத் துன்புறுத்தாமலும் உண்மையான மனித நேயத்துடனும் வாழ்ந்திட வரமருள வேண்டுமென்று...

விண்ணுலகில் ஆண்டவர் அருகில் அமர மண்ணுலகில் ஏழைகளின் வாழ்வை நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதை உணர்ந்தவர்களாக ஏழைகள் அநாதைகள், கைவிடப்பட்டோர் ஆகியோரை அன்பு செய்து எம்மால் இயன்ற உதவிகள் புரிந்து எம்மிடம் இருப்பதை பிறருடன் பகிர்ந்து வாழவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று...

# சிந்தனைக்கு!

“மனிதனுக்கு பிரச்சினை இல்லையென்றால் கடவுளுக்கு அர்ச்சனை இல்லை

“சிரித்துக் கொண்டே சொல்லப்படும் உண்மைகளைவிட அழுதுகொண்டே சொல்லும் பொய்களே அதிகம் நம்பப்படுகிறது!”

ஆடம்பரம் என்பது ஆடும் பம்பரம் எப்போது வேண்டுமானாலும் சாய்ந்து விடலாம்!

உழைக்கும் வயதில் உறங்க நினைத்தால் உறங்கும் வயதில் உழைக்க நேரிடும்.

“சில காயங்கள் மருந்தால் சரியாகும். சில காயங்கள் மறந்தால் சரியாகும்!”

“மக்கள் ஸ்மார்ட்போன் வாங்கும் அளவுக்கு பணக்காரராகவும், கீரை வியாபாரியிடம் பேரம் பேசும் அளவுக்கு ஏழையாகவும் இருக்கிறார்கள்.” S.B. டேவிட்

# அகதி வேடத்தில் வரும் கிறிஸ்துவை அடையாளம் காண்போம்.



## 2019 செப்டம்பர் 29ம் திகதி கொண்டாடப்படும் 105வது உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினத்தை முன்னிட்டு பிரான்சிஸ் பாப்பிறை வழங்கிய செய்தி.

**என் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே,**

இன்னும் நாம் வாழும் காலத்திலேயே அது எதிர்கொள்ளும் தடைகள் மற்றும் எதிர்ப்பைப் பார்த்து வருந்துகிறோம். வன்முறை, மோதல்கள் மற்றும் அனைத்து யுத்தங்களும் மனித நேயத்தைப் பிளவுபடுத்தும். உள்ளூர் அல்லது உலக அளவிலான பொருளாதார மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கடப்பது கடினமாக உள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக மிக வறியவர்கள் மற்றும் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுமேஇதற்கான விலையைக் கொடுக்கிறார்கள்.

மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சியுள்ள சமூகங்கள் தவிர தனிநபர் வாதத்தை நோக்கி வளர்ந்துச் செல்லும் ஒரு போக்கிற்கு வருகின்றன. இது வசதியை நாடும் மனோநிலையுடன் இணைந்து, ஊடகங்களால் வலுவூட்டப்பட்டு ஒரு உணர்வற்ற பூகோளமயமாக்கலை உருவாக்குகிறது. இந்த சூழ்நிலையில் புலம்பெயர்ந்தோர், அகதிகள், இடம்பெயர்ந்தோர் மற்றும் கடத்தல்காரர்களினால் பாதிக்கப்பட்டவர்கள், போன்றோர் ஒதுக்கப்பட்ட சின்னங்களாக மாறிவிட்டனர். இப்படியான துன்ப நிலையிலும் அவர்களை வெறுப்புணர்வுடன் பார்த்து சமூகத்தின் நோய்களாகக் கருதப்படுகின்றனர்.

இத்தகைய மனப்பான்மை தொடர்ந்தால், இது எம்முடைய ஒழுக்கச் சரிவை பிரதிபலித்து ஒரு வீணரயமாக்கும் கலாச்சாரத்திற்கு இடம் அளிக்கும். உண்மையில் இந்நிலை தொடர்ந்தால், எவராவது நமது விதிமுறைகளுக்குள் உள்ளடங்கிய உடல், உள, சமூக நலன்களுக்கு அப்பால் உள்ளவர்கள் என்றால் அவர்கள் ஒதுக்கப்படுவதற்கும் விலக்கப்படுவதற்குமான அபாயம் உள்ளது.

இதுவொரு வளமான சமுதாயத்தில் கவனிப்பட்ட வேண்டிய நிகழ்வு. அதனால்தான் குடியேறியவர்கள் மட்டும் அல்ல நாமும் அவர்களுக்காக அக்கறை காட்டும்போது, எல்லோருக்கும் நாம் அக்கறை காட்டுகிறோம். அவர்களைக் கவனிப்பதில் எங்களில் மறைந்திருக்கும் ஒரு பகுதிக்காகக் குரல் கொடுக்கிறோம்.

இவ்விடயம் இப்போதெல்லாம் நன்கு கருதப்படுவதில்லை. "தைரியமாயிருங்கள் நான் தான். பயப்படாதீர்கள்" (மத். 14:27). இது புலம்பெயர்ந்தோர் பற்றி மட்டுமல்ல எம்மைச்சுற்றியுள்ள சூழலில் உள்ள சில அற்பத்தனமானவை அல்லது அருவருப்பான அடையாளங்களை நாம் கவனிக்கும் போது எமக்கு மற்றவர்களைப் பற்றிய அச்சங்கள் கூடுகின்றன.

இதில் தெரியாதவர், வெளிநாட்டவர், அந்நியப்படுத்தப்பட்டவர் போன்றோர் உள்ளடங்குவர். குறிப்பாக குடியிருப்பாளர்கள் மற்றும் அகதிகள் பாதுகாப்பு மற்றும் ஒரு நல்ல எதிர்காலத்தைத் தேடி தம்முடைய கதவுகளைத் தட்டும்போது இதை நாம் பார்க்கின்றோம்.

இந்த அச்சம் ஓரளவிற்கு நியாயமானது. ஏனெனில் இப்படியான ஒரு சூழ்நிலைக்கு முகங்கொடுப்பதற்கு நாம் நம்மை போதியளவு தயார்ப்படுத்தவில்லை. ஆனால் பிரச்சினை சந்தேகங்களோ அல்லது அச்சங்களோ இல்லை. பிரச்சினை இவ்விடயங்கள் நம் சிந்தனையை வழிவகுக்கும்போது, நாம் சகிப்புத்தன்மையற்றவர்களாகவும் மூடிய மனதைக்கொண்டவர்களாகவும் சிலவேளைகளில், நம்மை உணராமலேயே இன வெறியாளர்களாகவும் ஒரு கட்டத்தில் நாம் வெல்கின்றோம்.

இவ்விதத்தில் எம்மிடமிருந்து வேறுபட்ட ஒரு நபரை எதிர்கொள்ளும் விருப்பத்தையும் திறனையும் தடுப்பதாலும் இந்நிலை ஆண்டவரை சந்திப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எம்மிடமிருந்து பறிக்கிறது. (2018 ஜனவரி மாதம் 14ம் திகதி உலக புலம்பெயர் அகதிகள் தினத்தின் போதனை). "உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? வரி தண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா?" (மத். 5:46). இது மீண்டுமொரு அகதிகள் தொடர்பான வசனம் அல்ல. அது அன்பையும் இரக்கத்தையும் கொண்டுள்ளது. இரக்கச்செயல்களினால் நாம் நம்பிக்கையை வளர்க்கிறோம்.

அன்பின் உச்ச சந்தர்ப்பமாக விளங்குவது, அந்நியோன்னியமாக ஒருவர் ஒருவரிடத்தில் எதையும் பகிர்ந்துகொள்ள முடியாத, குறைந்தப்பட்சத்தில் நன்றி என்றாவது கூறிக்கொள்ள முடியாத, நபர்களிடத்தில் அன்பைப் பாராட்டுவதாகும்.அந்த நடவடிக்கையினால் எமது மனித குலத்தின் உண்மையாக முகம் காட்டப்படுவதோடு மனித வாழ்வின் விழுமியமும் எடுத்துக்காட்டப்படுகிறது.

மனிதத்தின் வெற்றி, முன்னேற்றம் மற்றும் மனித நேயம் என்பன எமது வீட்டிற்கு வரும் அறிமுகமில்லாத நபரைக் கூட இரு கரங்கள் விரித்து, அன்புடன் வரவேற்கும் மனநிலையில் அடங்கியுள்ளது. இதன்போது, மனிதனை அடிமையாக்கி பயத்தை ஏற்படுத்தும் நிகழ்வை நடத்த முடியாது. பொய் வாக்குறுதி, மூட நம்பிக்கை, வஞ்சக மாயைகள், தற்காலிக இன்பம் தரும் விடயங்களை நாடுவதால் பலர் தமது வாழ்வின் யதார்த்தத்தை மறந்து குருட்டு வாழ்க்கையை வாழ்வதைக் காணலாம். இந்த குருட்டு வாழ்க்கையினால் மற்றவர்களின் துன்பத் துயரங்களை அவர்களால் ஏற்றுக்கொள்ளவோ, உணரவோ முடியாது.

"அவ்வழியே பயணம் செய்துகொண்டிருந்த சமாரியர் ஒருவர் அருகில் வந்து அவரைக் கண்டபோது, அவர் மீது பரிவு கொண்டார்" (லூக். 10:33). இது அகதிகள் பற்றிய உவமையல்ல. இது மனித வர்க்கத்தின் கதை. யூதேயாவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு வெளிநாட்டவனான சமாரியன், அவன் மனம் துன்பப்பட்டதனால் தான் இங்கே அடிப்பட்டுக் கிடப்பவனுக்கு உதவி செய்கிறான். இரக்கம் எனும் பண்பை சாதாரண ஒரு மனிதனால் புரிந்துகொள்வது கடினம். இரக்கத்தை மேலும் வரையறுத்துக் கூறினால், அது மனிதத்துவத்தின் மிகவும் உணர்வுபூர்வமான ஒரு செயலாவதோடு, துன்பத்திலிருக்கும் அனைவருக்கும் ஒரு அன்புள்ள அயலவனாக மனிதன் மாறுவதைக் குறிக்கும். இது பற்றி இயேசு கிறிஸ்து இவ்வாறு எமக்குப்போதிக்கிறார். (மத். 9-35-16, 14 -13-14,15-32-37 ஐப் பார்க்கவும்).

உண்மையான இரக்கம் என்பது, பிறரின் கஸ்டங்களைப் புரிந்துகொண்டு அவர்களை அதிலிருந்து மீட்பதும், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், அவர்கள் குணம் பெற உழைப்பதுமாகும். கருணைக்காட்டுதல் இன்னுமொரு முறையிலும் குறிப்பிடப்படுகிறது. இன்றைய சமூகத்தினால் தடுக்கப்படுகின்ற இரக்கச்செயல்களுக்கு இடங்கொடாமை, உதவியற்றவர்களுக்கு இரங்குதல் போன்றன. பலவீனம் என்பது முட்டாள்தனம் அல்ல. அந்த இரக்கக் கொள்கையினால் எம்மிடத்தில் உண்மையான மனிதம் வெளிப்படுகிறது. அது எம்மை இரக்கமிக்க நபர்களாக மாற்றுகின்றது. மற்றவர்களுக்காக எமது வாழ்வை அர்ப்பணிக்கச் செய்கிறது. அந்த தியாகத்தின் இறுதி இலக்காக தன்னுடைய இலாபம் கருதாது சமூதாயத்தின் நலனுக்காக உழைக்கும் நிலை ஏற்படும்.

"இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருத வேண்டாம். கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்போதும் இருக்கிறார்கள்" (மத். 18:10) இதுவும் புலம்பெயர்ந்தோர் பற்றிய கதையல்ல. யாரும் கைவிடப்பட மாட்டார்கள் என்பதற்கான உறுதிமொழியேயாகும். நவீன உலகில் கைவிடப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள் போன்றோருடன் மனித நேயமற்ற முறைகளில் நாம் நடந்துகொள்கின்றோம். விசேட வரப்பிரசாதங்கள் பெற்ற சிலரினால் அப்பாவிகள் மற்றும் நலிந்தவர்கள் மிகவும் துன்புறுத்தப்படுகிறார்கள். அவர்களிடம் காணப்படும் விசேட குணங்கள், விழுமியங்கள் மறுக்கப்படுகின்றன. அவை சூறையாடப்படுகின்றமையை நாம் இன்றைய சமுதாயத்தில் காணலாம். யுத்தத்தினால் ஏற்படும் பாதிப்புக்கள் உலக நாடுகள் சிலவற்றிற்கே ஏற்படும். ஆனால், யுத்தத்திற்காகப் பாவிக்கப்படும் கருவிகளைத் தயாரிக்கும் வல்லரசு நாடுகள் அதிக இலாபத்தைப் பெற்றாலும், யுத்தத்தினால் பாதிக்கப்படும் அப்பாவி மக்களை ஏற்றுக்கொள்ள அந்நாடுகள் முன்வர மறுக்கின்றன. இந்த நிலைமையில் எவ்வித பாதுகாப்போ, உறுதிமொழியோ இன்றி சிக்கித்தவிப்பது அப்பாவி ஏழை மக்களே. இந்த மக்கள் பணக்காரரின் மேசையிலிருந்து விழும் பாண் துண்டுகளைப் பொறுக்கி அதன் மூலம் தமது பசியை ஆற்றிக்கொள்கின்றனர். (லூக். 16:19-21)

## புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினத்தை முன்னிட்டு தேசிய இயக்குனரின் செய்தி



**அதி வண. சஞ்சீவ மெண்டிஸ்.**
**தேசிய இயக்குனர்,**
**புலம்பெயர்ந்தோர்**
**மற்றும் அகதிகளுக்கான**
**ஆணைக்குழு**

நம் கடவுள் நமக்கென அழகிய ஓர் உலகை படைத்துள்ளார். எல்லா மனிதர்களுக்கும், சகல உயிரினங்களுக்கும் அமைதியுடன் வாழக்கூடிய ஓர் சூழலையும் படைத்துள்ளார். ஆனால் சில மனித நடவடிக்கைகள் அச்சூழ்நிலைகளை சக சகோதரனை அகதியாகவும், புலம்பெயர்ந்தவர்களாகவும் ஆக்கியுள்ளது.

இச்சந்தர்ப்பத்தில், 150வது அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்கள் தினத்தை கொண்டாடுகின்றோம். அகதி மற்றும் புலம்பெயர்ந்த நிலைமை கடவுள் விரும்பும் ஓர் நிலையல்ல. ஆனால் அநேகமானோர் சொந்த தேசத்திலேயே அகதிகளாகவும், புலம்பெயர்ந்தோராகவும் வாழ்கின்றனர். இப்படிப்பட்டவர்களிடம் நாம் கடவுளைக் காணலாம் என்று இயேசு கூறுகின்றார். அவர்களின் வறுமை, அனாதை நிலைமை மற்றும் சிறைப்படும் நிலைமைகளை இயேசு நன்கு அறிவார். ஆதியில் இப்படிப்பட்ட ஓர் நிலைமையை பலரும் தம் சொந்த தேசத்தை விட்டு வேறு தேசங்களுக்கு சென்றதும், அவர்களுக்கு அங்கு அடைக்கலம் அளிக்கப்பட்டது என்றும் வரலாறு கூறுகின்றது. எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து இஸ்ரயேல் மக்களை கடவுள் தேர்ந்து கொண்டார். இப்படிப்பட்ட ஓர் சந்தர்ப்பத்தை இயேசுவும் முகங்கொண்டார். இப்படிப்பட்டவர்களின் வேதனைகளும், மன்றாட்டுக்களும் மற்றும் அவதிகளும் இயேசுவின் அனுபவங்களோடு கலக்கப்படுகிறது.

அனைத்து நாடுகளையும் விட இலங்கையில் இது ஒரு முக்கியமான தினமாகும். நம் நாட்டின் சமநிலையற்ற அரசியல் சூழ்நிலைகளும், நடவடிக்கைகள் மற்றும் வறுமை நிலைமை காரணமாக இந்நாட்டு மக்கள் சட்டரீதியாகவும், சட்டவிரோதமாகவும் பிற நாடுகளை நோக்கி செல்கின்றனர். சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் கடைசியில் புலம்பெயர்ந்தவர் நிலைமைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் அவர்களின் கனவும், குடும்பங்களின் கனவுகளும் சிதைக்கப்படுகின்றது.


அகதிகளுக்கும், புலம்பெயர்ந்தவர்களுக்கும் செய்யும் உதவியானது, புனித பாப்பரசரின் முக்கியமான கண்ணோட்டத்தில் உள்ளடங்கியுள்ளது என குறிப்பிடப்படுகின்றது. அதனால் எமது கத்தோலிக்க திருச்சபையுடன் சேர்ந்து இத்தினத்தில் அவர்களுக்காக மன்றாடுவோம். அவர்களுக்கு நம்மால் செய்யக்கூடிய உதவிகளை அளிப்போம்.

ஞான ஒளி GNANA OLI

# அகதிகள், புலம்பெயர்ந்தோருக்கான தேசிய கத்தோலிக்க ஆணைக்குழு தலைவரின் செய்தி

இடம்பெயர்ந்த மற்றும் அகதிகள் எவ்வேளையும் உதவியற்ற நிலையையும் தமது உயிருக்கு பாதுகாப்பு அற்ற றிலையையும் எப்பொழுதும் மற்றவரை அண்டி வாழும் நிலைமையையும் சந்திக்கின்றனர்.

நாட்டின் இயற்வளம், பொருளாதாரம், காலநி-லைகள் அனைத்தும் தமக்கு சாதாரணமாக இருப்பினும் சில அரசியல் சட்டதிட்டங்கள் மற்றும் போர் நிலைகள் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி தமது மற்றும் பிள்ளைகளின் வளமான, அமைதியான வாழ்வை கருத்தில் கொண்டு வெளிநாடுகளை நோக்கி பயணிக்கின்றனர். இப்படி சரணடைந்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட எமது கத்தோலிக்க திருச்சபை எங்களை அறிவுறுத்துகின்றது.




அதுவே சரியான வழிமுறை என்றும் கட்டளை இடுகின்றது. திருச்சபை எங்களை ஓர் சவால் அளிக்கும் அழைப்பிற்கு “ரேரும் நோஆரும்” என்ற பாடுபட்டு உழைக்கும் மக்களினத்தாரின் ஆவணங்களுக்கு அமைய எல்லோருக்கும் சம அளவிலான நீதி, நியாயம் மற்றும் சமநிலைமை அளிப்பது எமது கடமையாகும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது. ஐக்கிய தேசிய சாசனத்தின் அடிப்படையில் தமது தேசத்தில் உலகளாவிய சட்டதிட்-டங்களின் படி சம மனித உரிமைகள் கிடைக்கவேண்டும். நிம்மதி நாடி வரும் இடம்பெயர்ந்தவர்களுக்கும், அகதிக-ளுக்கும் நம் கண்கூடாக நீதி மற்றும் சமநிலைமையை கண்கொண்டு அவர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று மோசேயின் நீதி மொழியிலும் எழுதப்பட்டுள்ளது.

“வெளிநாட்டவர்களை துன்புறுத்தலுக்கு உள்ளாக்காதீர்கள்” யாத்திரையாகமம் 23:9 அன்னியரை நீ ஒடுக்காதே, அன்னியரது உணர்வுகளை நீங்கள் அறிவீர்கள், ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்கள் அன்னியராக இருந்தீர்கள், அகதிகள் மூலமாக இயேசு கிறிஸ்துவைக் காணவும், அன்பு செலுத்தவும் அழைக்கப்படுகின்றோம். லேவியர் ஆகமம் 19:34 உங்களிடம் தங்கும் அன்னியர் உங்கள் நாட்டில் பிறந்தவர் போல் இருக்க வேண்டும். உங்கள் மீது அன்பு கூர்வது போல் அவர் மீதும் அன்பு கூருங்கள். ஏனெனில் எகிப்தில் நீங்களும் அன்னியர்களாக இருந்தீர்கள். திருச்சபை எப்பொழுதும் இடம்பெயர்ந்த, அகதிகளுக்கு கருணை மற்றும் தயவு காட்டுவது எமது கடமை என்று பொறுப்புடன் கூறுவது ஏனென்றால் அவருடைய படைப்பாளி மற்றும் தாய் தந்தையுடன் கூடிய ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக எகிப்தில் அடைக்கலம் இன்றி வாழ்ந்ததன் காரணமாகவே. விடுதலைப்பயண வரலாற்றின் மூலம் நாம் காண்பது, இது போன்ற இடம்பெயர்ந்த, அகதிகளின் வாழ்நாள் கதைகளே. ஊர் தேசத்தில் இருந்து பயணித்த ஆபிரகாம், தமது சகோதரனுக்குப் பயந்து ஆரோன் தேசத்திற்கு வெளியேறிய யாக்கோபு, உணவு தட்டுப்பாடு காரணமாக எகிப்திற்கு சென்ற யாக்கோபின் புத்திரர்கள், ஏரோது அரசிற்கு அஞ்சி மிதியோன் தேசத்திற்கு சென்ற மோசேயின் குணாதிசயங்கள் போல், மோவப் தேசம் விட்டுச்சென்ற ரூத்தின் கதைப்படி கூறப்படும் வரலாற்றினூடாக கூறப்படுவது என்னவென்றால், சட்டதிட்டங்களின் வேறுபாடுகளை ஏற்றுக்கொண்டு பரஸ்பர, கௌரவ கவனிப்புக்களை ஏற்றுக்கொள்வதற்கு கிறிஸ்தவர்கள் விழிப்புக்குள்ளாக்கப்படுகின்றனர். இவ்வருடத்தில் 105ம் உலக இடம்பெயர்ந்தவர்களின் தினத்தையொட்டி பிரான்சிஸ் பாப்பானவர் கூறுவது என்னவென்றால், தற்கால சிந்தனைகளும், அதற்கு ஏற்ற சில கருத்துக்களும் அத்தகவல்களின் மூலம் கூறப்படும் கருத்து என்னவென்றால், நாங்கள் அதிக நேரங்களில் இடம்பெயர்ந்த மற்றும் அகதிகளைப்பற்றி மட்டுமன்றி எங்களைப்பற்றியும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்பதே.

அதன் வழியாக அவர் நினைவூட்டுவது



என்னவென்றால் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகளால் சமுதாயத்தில் முரண்பாடுகளும் ஒழுக்கக்கேடான விடயங்கள் நடைபெறுகின்றன என்ற சிந்தனையில் இருந்து வெளிவர அழைக்கப்படுகின்றோம். பலரிடம் இந்த கருத்து நிலவுவதால் வெளிப்படுவது என்னவென்றால் சமுதாயத்தில் நற்பண்புகளின் சரிவும் குறைவுமே. எதிர்காலத்தில் பயன்பாட்டின் பின் தூத்தி எறியப்படும் கலாச்சாரம் உருவாக்கப்படுமென வழியமைக்கப்படுகிறது. இதுவே பாப்பரசர் வலியுறுத்தும் ஓர் அம்சமாகும். எனவே அறிமுகமற்ற வேறு நபர் மீது நமக்கு ஏற்படும் பயமும் சந்தேகமுமானது கடவுளை காண்பதற்கு எமக்குக் கிடைக்கும் ஓர் சந்தர்ப்பமாகும். அச்சந்தேகமும் பயமும் இன்றைய இலங்கை ஆட்சி முறைக்கு பொருத்தமானது. அகதிகள் மூலமாக நாம் கடவுளைக் காண்கின்றோம். ஓர் நபரின் ஜாதி, மதம், சமுதாய பின்னணியை விசாரித்துப் பார்ப்பதற்கு இயேசுவின் அன்பு நற்செய்தி மூலம் கூறப்படவில்லை. மேலும் பாப்பரசர் வலியுறுத்தும் நான்கு நடவடிக்கைகள் எமக்கு சிறந்த பொருத்தமான வழிகாட்டிகளாக அமைகின்றன. பிறரை ஏற்றுக்கொள்ளவும், பாதுகாக்கவும், அனுக்கிரகம் அளிக்கவும், உள்ளெடுக்கவும் அறிவுறுத்தப்படுகின்றோம். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் அகதிகள் என்ற பெயர்களால் அறிமுகப்படுத்தப்பட்டால் அவர்கள் கடவுளின் மிக உயர்ந்த படைப்பின் கிரீடம் ஆவார்கள். அவர்கள எமது சகோதரர்கள். இக்கருத்தை முடிவுக்குக் கொண்டுவர பழக்கமான அர்த்தமுள்ள பாடலால் நினைவூட்டப்படுகின்றோம். இருந்தாலும் நீங்கள் எம் சகோதரர்.. எங்கிருந்தாலும் நீங்கள் எம் சகோதரர்....

# டிலாசால் அருட்சகோதரர்களின் 150வது ஆண்டு ஜுபிலி விழா நிகழ்வுகளின் தொகுப்பு

அருட்சகோ.
R. ஜோசப் ஜெயகாந்தன்











டிலாசால் அருட்சகோதரர்கள் இலங்கை மண்ணில் காலடி வைத்து 150 ஆண்டுகளின் ஜுபிலி விழாவையும், அச்சபையின் நிறுவுனர் தூய ஜோன் பப்ரிஸ்ட் டிலாசால் இவ்வுலகை விட்டு நீங்கிய 300 ஆண்டுகளின் ஜுபிலி விழாவையும் கடந்த புரட்டாதி மாதம் 1ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவர்களின் தாய் இல்லமான கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள டிலாசால் இல்லத்தில் இறைவனுக்கு நன்றி கூறி ஜுபிலி விழாத் திருப்பலியை கொழும்பு உயர்மறைமாவட்டப் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுத்தனர். அவ்வேளை டிலாசால் அருட்சகோதரர்களின் உலகத் தலைவர் மேன்மை தங்கிய அருட்சகோதரர் றொபேட் ஷீலர் (Superior General) கிழக்கு ஆசிய லசாலிய மாகாணத்தின் மாகாணத் தலைவர் அருட்சகோதரர் ஆர்மின் லுயிஸ்ரோ (Provincial Visitor, Lasallian East Asia District), கொழும்பு உயர்மறைமாவட்டத் துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, பதுளை மறைமாவட்ட ஆயரும், ஆயர் பேரவையின் தலைவருமான ஆயர் மேதகு. வின்சன்ட் பெர்னாண்டோ ஆண்டகை, கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் ஓய்வுபெற்ற முன்னாள் பேராயர் அதிமேதகு. ஓஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை, இலங்கை துறவற சபைகளின் ஒன்றியத் தலைவர் அருட்தந்தை டிலான் பெர்னாண்டோ (S.S.S), கத்தோலிக்க விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சர் கௌரவ ஜோன் அமரதுங்க, இன்னும் பல அருட்தந்தையர்கள், அருட்சகோதர சகோதரிகள், இறைமக்கள், பழைய மாணவர்கள் என பெருந்தொகையானோர் சமூகம் தந்து திருவிழாத் திருப்பலியில் ஒரே குடும்பமாக இவர்களின் பணிக்காக இறைவனுக்கு நன்றி கூறினர்.

இத்திருப்பலியில் மறையுரையாற்றிய பேராயர், இறைவன் தன்னுடைய திட்டத்தை பல்வேறு விதமான முறையில் நிறைவேற்றுவார். இதுதான் தூய ஜோன் பப்ரிஸ்ட் டிலாசாவின் வாழ்விலும் நிகழ்ந்தது. அவர் பிரான்ஸ் தேசத்தின் ரீம்ஸ் நகர குருவாகப் பணிபுரிந்தார்....


தொடர்ச்சி 15ஆம் பக்கம்





அற்றியன் ஐவன் – தரம் 4
புனித பேதுரு கல்லூரி



ஜோன் ரிசோன்– தரம் 5
இராஜகிரிய



டெவின் லிஸ்தர் – தரம் 4
இராஜகிரிய



ஜோன் ரிசோன்– தரம் 5
இராஜகிரிய

# துரிதம்

**கோழிக் கடை பிராய்லர் கோழியும் நாட்டுக் கோழியும் நலம் விசாரித்துக் கொண்டன...**





**பிராய்லர் கேட்டது:**

***மக்கள் ஏன் "நாட்டுக் கோழி.... நாட்டுக் கோழி" என்று உன்னையே நாடுகிறார்கள்? இரு மடங்கு விலை கொடுக்கிறார்கள். அப்படி என்ன என்னிடம் இல்லாதது உன்னிடம் இருக்கிறது?***

**நாட்டுக் கோழி சொன்னது:**

***உன்னை ஒரே இடத்தில் உட்கார வைத்துத் தீனி போடுகிறார்கள். நீ குண்டாக வேண்டுமென்றே ஊசி போடுகிறார்கள்.. நீயும் இருந்த இடத்திலேயே பெருத்துப் போகிறாய். அது தான்.... உனக்கும் கொழுப்பு. உன்னைத் தின்பவருக்கும் கொழுப்பு. உன்னை வளர்ப்பவருக்கும் கொழுப்பு!***

**தொடர்ந்தது:**

***ஆனால் நான் உன்னைப்போல் இல்லை. என் உணவை நானே தேடி அங்கும் இங்கும் அலைகிறேன். இயல்பாக வளர்கிறேன். எனவே எனக்குக் கொழுப்பு குறைவு. மதிப்பு அதிகம்.***

**பிராய்லர் கேட்டது:**

***எனக்கும் மதிப்பு வர என்ன செய்ய வேண்டும்?;***

**நாட்டுக் கோழி சொன்னது:**

***ஓடியாடி உழைத்துப் பார். கொழுப்பு குறையும். மதிப்பும் கூடும்.***

**அதி விரைவில் வரும் பயன் ஆபத்தானதே...!**

# மறைக் கல்வி அறிவோம்



**1. இறைவன் நம்மை எதற்காகப் படைத்தார்?**

B இறைவன் நம்மை படைத்தது, நாம் இவ்வுலகில் அவருக்கு அன்பு செய்து முடிவில்லா வாழ்வினைப் பெற்றிடவேயாகும்.

**2. நாம் இறைவனை யார் வழியாக அறிந்து கொள்கின்றோம்?**

B நாம் இறைவனை அறிந்துக்கொள்வது அவரது திருமகனாகிய இயேசுகிறிஸ்துவின் வழியாகவே.

**3. கிறிஸ்து இவ்வுலகிற்கு அளித்த செய்தி யாது?**

B கிறிஸ்து இவ்வுலகிற்கு அளித்த செய்தி,இறைவன் மனிதனை அன்பு செய்கிறான் என்பதே.

**4. நீ கிறிஸ்துவின் பின் செல்கிறாயா?**

B ஆம் நான் கிறிஸ்துவின் பின் செல்கிறேன். அப்படியென்றால் நான் எப்படி வாழ வேண்டும்? கிறிஸ்துவை பின் செல்பவன் அவர் தம் படிப்பினைகளை ஏற்றுக்கொண்டு அதன்படி வாழ வேண்டும்.

**5. இறைவன் இருக்கிறார் என்பதை நாம் அறிவதெப்படி?**

B நாம் காண்கின்ற பொருட்களின் வழியாகவும் கிறிஸ்துவின் படிப்பினைகளின் வழியாகவுமே இறைவன் இருப்பதை அறிகிறோம்.

**6. நாம் காண்பவற்றைக்கொண்டு இறைவன் ஒருவர் இருக்கிறார் என அறிந்துக்கொள்வது எப்படி?**

B நாம் காண்பவை யாவும் அற்புதமாக திட்டமிடப்பட்டு ஒழுங்கான முறையில் உருவாக்கப்பட்டுள்ளதைக் கொண்டு இறைவன் இருக்கிறார் என நாம் அறிந்துக்கொள்ளலாம்.

**7. நாம் காண்பதை விட வேறு வழிகளில் இறைவனை அறிந்து கொள்ள முடியுமா?**

B முடியும். நாம் காணக்கூடியவற்றினூடாக இறைவனைக் காண்வதோடு, இறைவார்த்தை வழியாகவும், அவரை அறிந்துக்கொள்ள முடியும்.




## விவிலியப் பகுதி



### நற்செய்தி : புனித மாற்கு
### அதிகாரம் – 06

95. அவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஊரில் என்ன செய்ய சொன்னார்?
96. சீடர்கள் ஏ்ன அடையாளங்களை செய்தார்கள்?
97. இயேசுவின் பெயர் எங்கும் பரவியதால் அவரை பற்றி மக்கள் என்ன நினைத்தார்கள்?
98. ஏரோது அரசன் இயேசுவை பற்றி என்ன நினைத்தான்?
99. ஏரோது தவறுதல் செய்து யாரை மனைவியாக்கி இருந்தான்?
100. ஏரோதிடம், 'உம் சகோதரர் மனைவியை வைத்திருப்பது முறையல்ல" என்று சொன்னவர் யார்?
101. யோவானை கொலை செய்ய எண்ணிக்கொண்டிருந்தது யார்?
102. ஏரோதியாவுக்கு யோவானுடைய தலையை வெட்ட எப்படி வாய்ப்பு கிடைத்தது?
103. யோவானுடைய தலையை யாரிடம் கொண்டு வர கட்டளையிட்டான்?
104. யோவானுடைய உடலை கல்லறையில் வைத்தது யார்?
105. இயேசு திருத்தூதர்களிடம் எங்கு சென்று ஓய்வு எடுக்க சொ்னார்?


☛ 15

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com


**மேலே தரப்பட்டுள்ள உவமையை தெளிவாக வாசித்து பூர்த்தி செய்து இம்மாதம் செப்டம்பர் 23ம் திகதிக்கு முன்னர் மேலுள்ள முகவரிக்கு அல்லது ஈ-மெயிலுக்கு அனுப்புங்கள்.**
பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு போன்ற விபரங்களை எழுதும் முதல் 5 மாணவர்களின் விபரங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

# இயேசுவும் சக்கேயும் \ புனித லூக்கா 19:1-10

01


இயேசு எரிகோவுக்குச் சென்று ........................................................................................ பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டு வோருக்குத் தலைவர்.

02 இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார்; ........................................................................................ குட்டையாய் இருந்தார்.



03 அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக் கொண்டார். இயேசு அவ்வழியே தான் வரவிருந்தார். ........................................................................................ என்றார்.




04 இதைக் கண்ட யாவரும், 'பாவிகளிடம தங்கப் போயிருக்கிறாரே இவர்" என்று முணுமுணுத்தனர்.

05 அவர் விரைவாய் இறங்கி வந்து ................................................................................



06 சக்கேயு எழுந்து நின்று, ........................................................................................ என்று அவரிடம் கூறினார்.



07


இயேசு அவரை நோக்கி, ........................................................................................ என்று சொன்னார்.

## மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்



# உன்னை நீயே பாராட்டக் கற்றுக்கொள்

ஒவ்வொரு மனிதனும் மற்றவர்கள் தன்னைப் பாராட்ட வேண்டும் என்று விரும்புகின்றான். மற்றவர்கள் தன்னைப் பாராட்டும்போது மகிழ்ச்சியடைகின்றான். நம் செயல்கள் அனைத்தும் நாம் மற்றவர்களின் பாராட்-டைப் பெற வேண்டும் என்பதற்காகத் தான்.

பிறரின் அன்பை நாம் எப்படிப் பெறுகின்றோம் என்றால் பிறர் நம்மை பாராட்டுதல் வழியாகவும் புகழ்தல் மூலமாகவும் ஏற்றுக் கொள்தல் மூலமாகவும் மதிப்பளித்தல் மூலமாகவும் புரிந்து கொள்ளுதல் மூலமாகவும்தான்.

தன்னைப் பாராட்டுவது பிறர் பாராட்டை ஏற்றுக் கொள்ளுவது இவை இரண்டும் தாழ்ச்சிக்கு எதிரானவை ஆன்மீக வாழ்வுக்குத் தடையானவை என்று நீ நினைப்பதால் உன்னை நீ கண்டு கொள்ளாமல் வாழ்கின்றாய்.

உன்னிடம் உள்ள உண்மைகளை நீ ஏற்றுக் கொள்வதும் பாராட்டுவதும் வீண் பெருமையன்று உன்னை நீ ஏற்றுக் கொள்வதுதான் உண்மையான தாழ்ச்சியாகும்.

மற்றவர்களால் பாராட்டப்பட வேண்டும் என்று எண்ணுகின்ற நீ முதலில் உன்னையே பாராட்டக் கற்றுக் கொள். பாராட்டுதற்குரிய பண்புகள் உன்னில் புதைந்து கிடக்கின்றன. அவற்றை நீ வெளியே கொண்டு வரவேண்டும்.

# திருடப்படும் மூளை!

ஐம்பது, அறுபது வயதை எட்டும்போதுதான் நோய் தாக்கும் என்ற நிலை இன்றில்லை. ஆரோக்கியமற்ற பழக்கங்களால் 25, 30 வயதிற்குள்ளே முதுமைக்குரிய அனைத்துவித உடல் உபாதைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக, உண்ணும் உணவில் அக்கறையின்மையும், போதிய ஓய்வின்மையும் இவற்றிற்குக் காரணங்கள். போதிய ஓய்வு கொடுக்காத மனமும் நலமாய் வாழ்ந்ததாய் சரித்திரமில்லை. இக்கால இளைய சமூகத்திற்குத் தகுந்த ஓய்வெடுக்கக் கற்றுக் கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் கும்பகர்ணத் தூக்கமும், 'ராக்கோழி' வேலையும் சாதிப்பதற்குத் தடையே!

எப்பொழுதும் தூங்கிக் கொண்டிருக்கின்ற இளைஞர்கள் ஒரு கூட்டம் என்றால், அதைவிட பன்மடங்கு ஏறுமுகத்தில் அவ்வப்போது அல்லது எப்போதாவது தூங்குகின்ற இளைஞர்களால் பகல் இரவாவதும், இரவு பகலாவதும் தொடர்கிறது. 'தூங்காதே தம்பி தூங்காதே, நீயும் சோம்பேறி என்ற பெயர் வாங்காதே' நாடோடி மன்னன் படத்தில் வரும் இந்தப் பாடல் வரிகள் இன்றைய இளையத் தலைமுறைக்கு ஒத்து வருமா என்று தெரியவில்லை. அப்படி என்னதான் விடிய விடிய பார்ப்பதற்கு ஊடகத்தில் உள்ளது? தூக்கத்தை தொலைக்கின்ற அளவிற்கு இளைஞர்கள் இலட்சியத்திற்காய் இராப்பகலாய் உழைக்கிறார்களா? இல்லையே! பின் ஏன் தூக்கமின்மை? நள்ளிரவிலும் வலைத் தளங்களில் மூழ்குவது, ஊடக உறவுகளில் கலாய்ப்புக்கள் நீள்வது இன்றைய சமூகத்தின் சாபக்கேடு! படுக்கைக்குச் சென்ற பின்னரும் எவ்வளவு நேரம் நாம் வாட்ஸ் ஆப்பிர், பேஸ்புக்கில், செலவிடுகிறோம்? இரவு படுக்கையிலிருந்து அவ்வப்போது எழுந்து அலைபேசியில் எத்தனை முறை வலைத்தளங்களில் மூழ்குகிறோம்?



## பாதிக்கப்படும் இளைய சமூகம்

சமீபத்தில் நெட்பிளிக்ஸ் தொடர்கள், படங்களைத் தொடர்ந்து பார்த்ததன் விளைவாக, பெங்களுரைச் சேர்ந்த 26 வயது இளைஞர் மனநலம் மற்றும் நரம்பியல் துறை (நிம்ஹான்ஸ்) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இந்தியாவில் நெட்பிளிக்ஸால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்படும் முதல் நபர் இவர்தான். வேலையில்லாத இவர் ஒவ்வொரு நாளும் ஏழு மணி நேரத்தை நெட்பிளிக்ஸில் செலவிட்டிருக்கிறார். தனி உலகமாக இயங்கிக் கொண்டிருக்கும் நெட்பிளிக்ஸ் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்ப்பதால் மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள் என மனநல மருத்துவர்கள் எச்சரிக்கின்றார்கள்.

பெரும்பாலான இளைஞர்கள் இன்று கணனி, செல்போன், வாட்ஸ் ஆப் இவற்றில் அதிக நேரம் செலவிடுவதால் போதியளவு தூங்குவதில்லை. இதனால் உடல்நலமும், மனநலமும் பாதிப்புக்குள்ளாகின்றன. தூக்கம் என்பது மனத்தோடு தொடர்புடையது. மன அமைதி இல்லையென்றால் எத்தனை நேரமானாலும் தூக்கம் வராது. உலகிலேயே இந்தியர்தான் மிகக் குறைவாக உறங்குவதாக ஆய்வுகள் சொல்லுகின்றன.

உலகத் தூக்கத் தினத்தை முன்னிட்டு 'ஹெல்த் பிட்னஸ்' நிறுவனம் ஆய்வு ஒன்றினை நடத்தியது. அதன்படி உலகளவில் மொத்தம் 18 நாடுகளைச் சார்ந்த மக்கள் மிகக் குறைவான நேரமே தூங்குகிறார்கள். ஆசிய நாடுகளில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 6.55 மணிநேரம் மட்டுமே தூங்குகிறார்கள். அத்தோடு ஆசிய நாட்டவர்கள் உடல்நலனைப் பேணுவதில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதும் இல்லை என்கிறது இந்த ஆய்வு.

## ஆறு மணி நேரம் தூங்கினால் பரிசு!

நாளொன்றுக்கு இரவில் ஆறு மணிநேரம் தூங்கும் ஊழியர்களுக்கு ஊக்கப்புள்ளிகள் பரிசாக வழங்கப்படும். இந்த ஊக்கப் புள்ளிகள் மூலம் நிறுவனத்துக்குச் சொந்தமான உணவகத்தில் ஆண்டுக்கு ரூ 48 ஆணிலம் (570 டொலர்) வரை சாப்பிட்டுக் கொள்ளலாம் அல்லது பணமாகப் பெற்றுக் கொள்ளலாம். இச்செய்தி கடந்த வருடம் செய்தித்தாளில் வெளிவந்தது. ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள கிரேஸி இன்டர்நேஷனல் எனும் திருமணங்களை நடத்தி வைக்கும் நிறுவனம் இத்திட்டத்தை தங்கள் பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. பணியாளர்களின் அலைபேசியில் ஒரு 'ஆப்ஸ்' பதிவேற்றம் செய்யப்படும். இந்த ஆப்ஸை பணியாளர்கள் 'ஆன்' செய்து வைத்துத் தூங்கும் போது, அந்த ஆப்ஸ் தூங்குபவர்களைக் கண்காணிக்குமாம்! மனிதர்களைத் தூங்க வைக்க எப்படியெல்லாம் யோசிக்க வேண்டியுள்ளது!

இன்று ஜப்பானில் 90 வீதத்தினர் 20 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் சமூக ஊடகங்களில் லயித்து, இரவு தூக்கத்தைத் தொலைத்து விடுகின்றனர். மறுநாள் வேலைக்கு வந்து ஆர்வத்துடன் பணியில் ஈடுபடுவதில்லை. இதனால் உற்பத்தி பாதிக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு இம்முறையை அறிமுகப்படுத்தியதாகச் சொல்கிறார்கள்.

பணியிலிருந்து வீடு திரும்பினாலும், வீட்டை இன்னோர் அலுவலகமாக மாற்றிப் பணிபுரிவோர் எப்பொழுது பார்த்தாலும் சமூக வலைத்தளங்களை வருடிக் கொண்டிருப்போர் குறித்து கவலைப்படாமல் இருக்க முடியாது. ஆரோக்கியமான இளைஞர்களால் மட்டுமே ஆரோக்கியமான நாடு சாத்தியப்படும்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளில் 8 மணி நேரம் தூங்குவது நல்லது. குறைந்தபட்சம் 6 மணி நேரத் தூக்கமாவது அவசியம். வாஷிங்டனில் இயங்கி வரும் தேசியத் தூக்க நிறுவனம் ஆய்வுப்படி 14 முதல் 17 வயது வரையுள்ள பதின்பருவச் சிறார்கள் 8 மணியிலிருந்து 10 மணி வரை தூங்கலாம் என்கிறது. இவர்கள் தினமும் 11 மணி நேரங்களுக்கு மேலாகவோ அல்லது 7 மணி நேரங்களுக்குக் குறைவாகவோ தூங்குவது தவறு என எச்சரிக்கிறது. அவ்வாறே 18 முதல் 25 வயது வரையுள்ள இளைஞர்கள் தினமும் 7 மணியிலிருந்து 9 மணி நேரங்கள் வரை தூங்கலாம். மாறாக ஆறு மணி நேரத்திற்குக் குறைவாகவோ அல்லது 11 மணி நேரத்திற்கு மேலாகவோ தூங்கக்கூடாது என்கிறது. நாம் தினமும் எத்தனை மணி நேரம் தூங்குகின்றோம்? நாம் எப்பொழுது படுக்கைக்குச் செல்கிறோம்? 'நரகம் எது?' என்பதை தூக்கமின்மையால் அவதிப்படுபவர்களிடம் கேட்டுப் பாருங்கள் தெரியும்.

## உலகச் சந்தையின் பரிவர்த்தனை பண்டமாகும் இளையோர்.

சமூக வலைத்தளங்கள் இளைஞர்களின் தூக்கத்தை மட்டும் காவு கொள்வதில்லை. மாறாக, இளைஞர்களை ஒரு பரிவர்த்தனைப் பண்டமாக மாற்றி, அவர்களின் மூளைகளைத் திருடவும் செய்கின்றன என்பதே உண்மை! ஷேக்ஸ்பியரின் வார்த்தைகளில், "உலகமே நாடக மோடை, நாமெல்லாம் நடிகர்கள்" என்ற சூழல் மாறி, இன்றைய உலகமயமாக்கல் சகாப்தத்தில் உலகமே சந்தை, நாமெல்லாம் சந்தையின் பரிவர்த்தனைப் பண்டங்களாக பாவிக்கப்படுகிறோம். சந்தைப் போட்டியே அறம் என்றாகி விட்டது.

## திருடப்படும் மூளை :

அன்றாடம் நாம் பயன்படுத்தும் வாட்ஸ் ஆப், பேஸ்புக், டுவிட்டர் இவற்றிற்கு வாடிக்கையாளர்கள் நாம் அல்லர், மாறாக, விளம்பரம் கொடுப்பவர்கள் தான். நாம் வெறும் விற்பனைப் பண்டங்கள் மட்டுமே! அதாவது பேஸ்புக்,...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## புனித அன்னை தெரேசா ஓர் அன்னையே! நம் இதயங்களில் வாழ்கிறார்!!



மதங்களுக்கு இடையே நல்லிணக்கத்தையும், இந்தியாவின் சமயச்சார்பற்ற விழுமியங்களையும் ஊக்குவிக்கும் நோக்கத்தில், மேற்கு வங்காள மாநிலத்தில், ஒரு புகழ்பெற்ற சந்தையின் நடுவில், புனித அன்னை தெரேசாவின் திருவுருவம் வைக்கப்பட்டுள்ளது.

கொல்கத்தா நகருக்கு 15 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள, Nepalgunge Hatt சந்தை அமைந்துள்ள இடத்தில், புனித அன்னை தெரேசாவின் 109வது பிறந்த நாளான, ஆகஸ்ட் 26, செவ்வாயன்று, இந்நிகழ்வு நடைபெற்றது.

பல்சமய உரையாடலை ஊக்குவிக்கும், Nepalgunge More Bebasahi எனப்படும் குழுவின் முயற்சியால், பலரும் கூடுகின்ற முக்கியமான சந்தையில், பல்வேறு மதங்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி, புனித அன்னை தெரேசாவின் திருவுருவத்தை வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில், கத்தோலிக்கர் சார்பாக கலந்துகொண்ட Baruipur மறைமாவட்ட வாரிசுரிமை ஆயர் Shyamal Bose அவர்கள் பேசுகையில், தான் பயிற்சி மாணவராக இருந்த சமயத்தில் அன்னை தெரேசா அவர்களைச் சந்தித்தேன் எனவும், ஏழைகளின் முகங்களில் அவர் கடவுளைக் கண்டார் எனவும் கூறினார். உள்ளூர் மசூதியின் இமாம் Sahidulla Khan அவர்கள் பேசுகையில், ஓர் அன்னையைப் போல, அவர் நம் இதயங்களில் வாழ்கிறார் என்றார். அந்த சந்தைக் குழுவின் செயலர், Sathya Ranjan Panja அவர்கள் பேசுகையில், விவேகானந்தர் உருவச்சிலைக்கு அருகில், புனித அன்னை தெரேசாவின் உருவச்சிலையும் இருக்க வேண்டுமென, அப்பகுதி மக்கள் விரும்பியதால், அவரின் பிறந்த நாளை, இதற்குத் தெரிவு செய்தோம் என்று தெரிவித்தார்




## சிறு சிறு அன்புச் செயல்கள், இவ்வுலகைக் காப்பாற்றும்!



Antananarivoவில் மடகாஸ்கர் நாட்டு ஆழ்நிலை தியான துறவு சபை அருள்சகோதரிகளைச் சந்தித்த நிகழ்வில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் இதயத்தில் எழுந்த எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டார்.

சிறுமலரான புனித குழந்தை தெரேசாவின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்வுடன் தன் பகிர்வைத் தொடங்கினார். புனித தெரேசா, வயதுமுதிர்ந்த ஒரு சகோதரிக்கு, உணவூட்டியது உட்பட பல்வேறு உதவிகளைச் செய்த வேளை, அந்த வயதானவர் தொடர்ந்து புகார் சொல்லிக் கொண்டே இருந்தார். ஆயினும், புனித தெரேசா, எல்லா நேரங்களிலும் புன்னகையுடனே காணப்பட்டார். இதை, திருத்தந்தை, திரும்பத் திரும்பச் சொன்னார். நம் குழும வாழ்வில் நடப்பதில், ஒரு சிறிய பகுதியை இந்த நிகழ்வு பிரதிபலிக்கின்றது. புனித தெரேசா, உறுதியான கீழ்ப்படிதலுடன், மிக உன்னத அன்புடன் இதைச் செய்ததால், அவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறார். இதனாலே, புனித தெரேசாவால் இயேசுவிடம், இந்த வயதான சகோதரிக்கு ஆற்றும் ஓர் அன்புச்செயலைவிட, இந்த உலகில் அனைத்தும், என்னை ஒருபோதும் மகிழ்ச்சிப்படுத்த முடியாது என்று சொல்ல முடிந்தது.

சிறு சிறு அன்புச் செயல்களையே கடவுள் விரும்புகின்றார். இச்செயல்கள் வழியாக, கடவுள் உலகை மீட்கிறார் என்று நம்புவதற்கும் துணிச்சலையும் பெறுகிறோம். உலகை மாற்றுவதற்கு அல்லது, துறவு வாழ்வை சிறப்பாக மாற்றுவதற்குரிய கனவுகள், இத்தகைய சிறு சிறு அன்புச் செயல்களிலிருந்தே தொடங்குகின்றன. இச்செயல்கள், கடவுள் நம் மத்தியில் இருப்பதை இன்னும் அதிகமாக்குகின்றன.

சோதனைகளுக்கு எதிராக ஒவ்வொரு நாளும் போராடுவது, ஆழ்நிலை தியான வாழ்வின் மற்றொரு கூறாகும். தன் உள்ளத்தில் எழும் இந்தச் சோதனையை இல்லத் தலைவரோடு அல்லது சக சகோதரியோடு பகிர்ந்துகொள்வது ஒன்றிணைந்த குழுவை அமைப்பதற்கு உதவும். இவ்வாறு கூறியத் திருத்தந்தை, தான் ஒரு வயதான அருள்பணியாளரோடு வாழ்ந்த சமயத்தில், புனித தெரேசாவின் வாழ்வில் நடந்த இந்நிகழ்வு தனக்கு உதவியாக இருந்தது என்பதையும் பகிர்ந்துகொண்டார். புனிதராக மாறுவதற்கு, இப்புனிதரின் வாழ்வு ஓர் எடுத்துக்காட்டு.



## கர்தினால் சில்வெஸ்திரினி

திருப்பீடத்தின் கீழை வழிபாட்டுமுறை பேராயத்தின் முன்னாள் தலைவரான, கர்தினால் சில்வெஸ்திரினி அவர்கள், தனது 95வது வயதில், ஆகஸ்ட் 29, வியாழனன்று இறைவனடி சேர்ந்தார். அவரின் இறுதி வழியனுப்பும் திருவழிபாடு, ஆகஸ்ட் 30, வெள்ளி மாலையில், வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காவில் நடைபெற்றது.

கர்தினால்கள் அவையின் துணைத் தலைவர், கர்தினால் ஜொவான்னி பத்திஸ்தா ரே அவர்கள் தலைமையேற்று நிறைவேற்றிய இறுதிச்சடங்கு திருப்பலியின் இறுதியில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கர்தினால் சில்வெஸ்திரினி அவர்களின் உடலை மந்திரித்து, இறுதி மரியாதை செய்தார்.

கர்தினால் அக்கிலே சில்வெஸ்திரினி அவர்கள் இறைபதம் அடைந்ததையொட்டி, அவரின் ஆன்மா இறைவனில் நிரந்தரமாக இளைப்பாறுவதற்காகச் செபித்த திருத்தந்தை அதேநேரம், கர்தினால் ஆற்றிய சிறப்பான பணிகளுக்கு நன்றியும் தெரிவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ். இத்தாலியின் Brisighella என்ற ஊரில் 1923ம் ஆண்டு பிறந்த கர்தினால் சில்வெஸ்திரினி அவர்கள், தனது 30வது வயதில், திருப்பீடத்தின் தூதரகப் பணிகளில் சேர்ந்தார். திருப்பீட செயலகத்தில், திருஅவையின் சிறப்பு விவகாரத்துறையில் பணியாற்றிய இவர், வியட்நாம், சீனா, இந்தோனேசியா, மற்றும், தென்கிழக்கு ஆசியாவில் இடம்பெற்ற பிரச்சனைகளைக் களைவதில் முனைப்புடன் செயல்பட்டவர்.

அணுஆயுதங்கள் பரவல் தடை ஒப்பந்தத்தில் திருப்பீடம் இணைவது தொடர்பான ஏட்டை சமர்ப்பிப்பதற்கு, 1971ம் ஆண்டில், கர்தினால் அகுஸ்தீனோ கசரோலி அவர்களுடன் மாஸ்கோ சென்றவர், கர்தினால் சில்வெஸ்திரினி. 1988ம் ஆண்டு ஜூன் 28ம் தேதி கர்தினாலாக உயர்த்தப்பட்ட இவர், வத்திக்கான் மனசாட்சி நீதிமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

## 01 எனது உணர்வுகளை...

புரிந்துணர்வையும் கடைப்பிடிக்க, இரு இன மக்களையும் அமைதிப்படுத்த மாறாக சில அரசியற் தலைவர்கள், தமது சொந்த அரசியல் நலனுக்காக மக்களைத் தூண்டிவிட்டு குழப்பங்களையும், தாக்குதல் சம்பவங்களையும் அரங்கேற்றினர்.

இத்தாக்குதல் நடைபெற்று மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. இன்றுவரை என் மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நான் தனிமைப்படுத்தப்பட்டே செயற்படுகின்றேன். விரைவாக இதைச் செயற்படுத்தாமல் மிகத் தாமதமாகவே திட்டமிட்டு செயற்படுவதாக நான் உணருகின்றேன். இதை இனங்கண்டு கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் அரசுக்கு அழுத்தம் கொடுப்பீர்கள் என எதிர்பார்த்தேன். இதற்கு காரணமானவர்களை அமைக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் மூலம் இனங்கண்டு, சட்டத்தின் முன் நிறுத்தி இனிமேலும் இப்படியான பயங்கரவாதத்தை செயற்படுத்தாமல் இருக்க தண்டனை வழங்கப்படும் என எதிர்பார்த்த எனது எதிர்பார்ப்பு உங்களால் கூட முன்வைக்கப்படவில்லை.

எமக்கு உண்மை தெரியவேண்டும். இதனைத் திட்டமிட்டது யார்? எதற்காக எமது வழிபாட்டுத் தலங்களை, அதுவும் உயிர்த்த ஆண்டவரின் தினமான பாஸ்கா தினத்தில் தாக்கத் தீர்மானித்தனர். எமக்குத் தெரியவேண்டும். இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்று? யார் இவர்களைச் செயற்படத் தூண்டினர்? இதற்கு உடந்தையாக இருப்பவர்கள் யார்? இவ்விளைஞர்களைப் பயிற்றுவித்தவர்கள் யார்? உதாரணமாக நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். யார் வாளைக் கொள்வனவு செய்து இறக்குமதி செய்தனர். இதனை சுங்கத் திணைக்களத்தினூடாக தீர்வையின்றி கொண்டு வந்தவர்கள் யார்? இதனை ஒவ்வொரு இடங்களுக்கு கொண்டு சென்று புதைத்தவர்கள் யார்? அதேபோன்று இராணுவச் சீருடைகள், ஆயுதங்கள், குண்டுகள் கண்ட கண்ட இடங்களில் கைப்பற்றப்பட்டன. இவையெல்லாம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது எமக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

எமது மக்களின் வாக்குகளினால் ஆட்சிக்கு வந்த நீங்கள் எமது மக்களின் குரலாக அவர்களுக்கு பணியாற்றுபவர்களாக இருக்கவேண்டும் என்பது எனது ஆசை. கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் எங்களோடு ஒத்துழைக்குமாறு அறைகூவல் விடுக்கின்றேன். எம்முடைய மக்கள் தான் பயங்கரவாதிகளின் முதல்தர இலக்காக இருக்கின்றனர். இன்னும் அவர்கள் (பயங்கரவாதிகள்) சுதந்திரமாக, எதுவித தண்டனையுமின்றி ஒழுங்கமைத்துக் கொண்டிருக்கின்றனர். எனவே புதிதாகத் தோன்றியுள்ள இச்சூழ்நிலைக்கு முகம் கொடுக்க புதிய அர்ப்பணிப்போடு உண்மையோடும், நீதியோடும் நிற்கின்றேன். இதற்காக ஒரு நோக்கு இல்லாம் காலத்துக்கு காலம் காட்சிகளை மாறி மரத்துக்கு மரம் தாவும் குரங்குகள் போன்று செயற்படாதீர்கள். இது இதற்கான தீர்வு அல்ல.

எனவே உங்களில் புதிய அரசியல் கலாச்சாரம் தோன்ற வேண்டுமென விரும்புகின்றேன். நீங்கள் கிறிஸ்துவின் சீடர்களாகப் பணி புரிய ஆசிக்கின்றேன். இருக்கின்ற அர்த்தமற்ற, ஊழல் நிறைந்தவர்களோடு, எப்போதும், எப்படியும் அரசியல்வாதிகளாக இருக்கலாம். ஆண்டவர்களோடு நீங்களும் ஒருவராக மாறவேண்டாம். சிறப்பாக நாம் முகம் கொடுக்க இருக்கின்ற ஜனாதிபதித் தேர்தலில் எம்மக்களின் பாதுகாவலர்களாக, அவர்களுக்கு குரல் கொடுப்பவர்களாக உங்களது பங்களிப்பை வழங்கக் கேட்டு நிற்கின்றேன்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் சில முடிவுகளை நாம் எடுக்க இருக்கின்றோம். அவற்றுக்கு உங்களுடைய ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன். இவை சிலவேளை உங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு முட்டுக்கட்டையாக கூட இருக்கலாம். ஆனால் மக்களின் எண்ணங்களுக்கும் அழுகைக் குரல்களுக்கும் விடை கொடுப்பவர்களாக, நீதியோடு செயற்பட வேண்டுமானால் இவற்றை நாம் செய்தே தீரவேண்டும், இதனையும் உங்கள் கருத்தில் கொள்ளுங்கள்.

மேற்கூறப்பட்டவைகளை நான் குறிப்பிடும் பொழுது நானும் ஏதோ ஒரு அரசியலை கட்சிக்காகப் பாடுபடுகின்றேன் என்று எண்ணவேண்டாம். எனக்கு எதுவித அரசியல் விஞ்ஞாபனமும், நோக்கமும் இல்லை. தற்கொலைத் தாக்குதல் தினத்தில் இருந்து இன்றுவரை நான் கிறிஸ்துவின் பிரதிநிதியாக, மக்களின் ஆயனாகவே செயற்பட்டு வருகின்றேன். ஆட்சிக்கு வரும் எல்லா அரசோடும் நான் ஒத்துழைப்போடு செயற்பட்டே வருகின்றேன். குறிப்பாக தற்போதைய ஆளும் அரசோடு கூட. எனவே உடனடியாக தனிப்பட்ட பக்கச் சார்பற்ற ஆணைக்குழுவை நியமித்து எமக்கு நடைபெற்ற அனர்த்தத்திற்கான நீதியான தீர்வைப் பெற்றுத்தாருங்கள். இதில் நான் உறுதியாக உள்ளேன். தொடர்ந்தும் இதற்கான என் மக்களோடு இணைந்து இறுதிவரை செயற்படுவேன் என்றார்.

2010 - 2020 ஞான ஒளி GNANA OLI



# மாளிகாவத்தை, சமாதான இராக்கினி ஆலய வெள்ளி விழா

**தகவல் : செல்வி. மெரினா பீரிஸ்**

## கொழும்பு உயர்மறைமாவட்ட மாளிகாவத்தை சமாதான இராக்கினி பங்கின் வரலாற்று சுருக்கம் (1980 – 2019)

கொழும்பு நகரத்தின் மத்தியில் பாதை ஓரத்தில் யாரும் பார்க்கும் வண்ணம் அழகாகக் காட்சியளிக்கும் ஆலயம், அதனோடு ஒட்டியதாக 16 அடி உயரம் கொண்ட அன்னையின் திருச்சுரூபம், பல்சமயத்தினைச் சேர்ந்த பல இன மக்கள் வாழும் பரபரப்பான பகுதியாகையால், இன மத பேதமின்றி பலரும் வந்து வணங்கிச் செல்லும் ஆலயமாக சிறப்பு பெறுகின்றது.

1980ம் ஆண்டளவில் காலங்சென்ற முன்னாள் பிரதம மந்திரி ரணசிங்ஹ பிரேமதாசா அவர்கள், மாளிகாவத்தை பகுதியில் வீடமைப்புத் திட்டம் ஒன்றினை நிர்மாணித்தார். பல இன பல் சமய மக்கள் இங்கு குடியேற்றப்பட்டார்கள். பௌத்த விகாரை, இந்து ஆலயம், இஸ்லாம் பள்ளிவாசல் ஆகிய மத வழிபாட்டு ஸ்தலங்கள் இருந்தபோதிலும் கிறிஸ்தவ ஆலயம் ஒன்று இருக்கவில்லை. அங்கு குடியேறிய மக்கள் தமது கிறிஸ்தவ கடைமைகளை நிறைவேற்ற அயல் பங்குகளை நாடிச் சென்றார்கள்.

1982ம் ஆண்டு அன்னையின் மாதமாகிய வைகாசி மாதம் காலங்சென்ற முன்னாள் பிரதம மந்திரி ரணசிங்ஹ பிரேமதாசா அவர்கள், வீடமைப்புத்திட்ட அமைச்சராக செயலாற்றிய காலத்தில், கத்தோலிக்கத் திருச்சபைக்கு ஒரு நிலப்பகுதியை கையளித்தார். இந்நிலப்பகுதி 1982ம் ஆண்டு ஆயர் இல்லத்தின் குருமுதல்வரான காலஞ்சென்ற அருட்பணி. மார்டீன் அ.ம.தி அடிகளாரும் காசாளராக (Procurator) பணியாற்றிய காலஞ்சென்ற அருட்பணி. பேற்ரம் தபரேரா அடிகளாரும் பணியாற்றிய காலத்தில் இவ்விடத்திற்கான உறுதி அப்போது பேராயராக இருந்த அதிமேதகு. நீக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையிடம் ஒப்படைக்கப்பட்டது. சிறிது காலம் இந்நிலம் வெறுமையாகவே இருந்தது.

1993ம் ஆண்டு பேராயர் அதிமேதகு. நீக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகை இவ்விடத்தில் ஒரு கத்தோலிக்க ஆலயத்தினை அமைக்கத் தீர்மானித்தார்கள். இதன் நிர்மாண வேலைகள் அப்பொழுது ஆயர் இல்ல கணக்காளராக பணிபுரிந்த அருட்பணி. பேற்ரம் தபரே-ராவிடம் ஒப்படைக்கப்பட்டது. அடிகளார் உடனடியாக வேலைகளை ஆரம்பிக்க முன்வந்தார்கள். அதன் முதல் கட்டமாக ஒரு சிறிய ஆலய அறை வீடொன்றினை அமைத்து அங்கு அவர் தங்கினார். அதன் பின்பு அப்பகுதி மக்களை ஒன்று சேர்த்து சில வழிபாடுகளை தொடர்ந்து ஆற்றி வந்தார். 1983ம் ஆண்டு நாட்டில் பேரினவாதம் தலைதூக்கியிருந்த காலகட்டம். அந்நேரம் நாட்டிற்கு சமாதானம் அத்தியாவசியமாக இருந்தது. எனவே இந்நோக்கத்தினையும் கருத்தில் கொண்டு இவ் ஆலயத்திற்கு ***சமாதான இராக்கினி ஆலயம்*** என பெயர் சூட்டினார். தற்காலிகமாக அமைக்கப்பட்ட இவ்வாலயத்திற்கு மக்கள் படிப்படியாக வரத்தொடங்கினர். 1988ம் ஆண்டு ஐப்பசி மாதம், 9ம் திகதி முதல் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

கிறிஸ்மஸ் திருவிழாத் திருப்பலியும், பாஸ்கா சடங்குகளும் அவ்வாண்டில் கொண்டாடப்பட்டது. படிப்படியாக மறைத்தூதுப்பணியும் ஆரம்பிக்கப்பட்டது. ***ஆலயம் ஒன்று நிர்மாணிப்பது என்பது இலகுவான காரியமல்ல என்பதனை உணர்ந்த அருட்தந்தை, திருமணித்தியாலம், செபமாலை போன்ற ஆன்மீகக் காரியங்களை அப்பகுதி மக்களைக் கொண்டு நடத்தி வந்தார்.*** எனவே புனிதர்களான ஜூட் ததேயுஸ், அந்தோனியார், செபஸ்தியார், சகாயமாதா போன்ற புனிதர்களின் பரிந்துரையை நாடினார். படிப்படியாக ஆலய நிர்மாண வேலைக்கு பண உதவி கிடைக்கத் தொடங்கியது. அதனைக் கொண்டு 1989ம் ஆண்டில் ஆலயத்தின் ஒருபகுதி நிர்மாணிக்கப்பட்டது. அதன் பின்பு அப்பகுதி, பேராயரால் அபிஷேகம் செய்யப்பட்டு பால் பொங்கி, நெருப்பும் தண்ணீரும் ஆசீர்வதிக்கப்பட்டது. அதற்கு மொழி ஒரு தடையாக இருக்கவில்லை. எது நிகழ்த்தப்பட்டாலும் அது மும்மொழிகளிலும் நிகழ்த்தப்பட்டது. இருள் நீங்கி ஒளி பெறுவதன் அடையாளமாக நெருப்பு ஆசீர்வதிக்கப்பட்டது.

முன்னாள் பேராயர் அதிமேதகு. ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகையின் வழிநடத்தலில் காலஞ்சென்ற அருட்பணி. ஜோன் ஹேரட் அ.ம.தி அடிகளாரினால் 16 அடி உயரம் கொண்ட அன்னையின் திருச்சுரூபம் ஒன்று வடிவமைக்கப்பட்டது. இத்திருச்சுரூபம் 1989ம் ஆண்டு மார்கழி மாதம் ஆலய முற்றலில் அமைந்துள்ள சுவரில் பொருத்தப்பட்டது. இச்சுரூபம் இலங்கையிலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் மிக உயரமான சுரூபமாக அன்று கணிக்கப்பட்டது.

மேன்மை தங்கிய வின்சன்ட் பெரேரா, ஐயரின் அக்னஸ் அலஸ் ஆகியோர் அருட்தந்தை பேற்ரம் அடிகளாரின் அழைப்பின் பேரில் கிறிஸ்மஸ் திருவிழாத் திருப்பலிக்கு வருகை தந்திருந்தார்கள். அவ்வேளை ஐயரின் அலஸ் அவர்கள் ஆலயத்தைப் பார்த்து பெருமிதடைந்து என்னிடம் கூற வார்த்தைகள் இல்லை எனக்கூறி, தான் இறந்த பின்பு தன்னுடைய சொத்தில் ஒரு பகுதியினை ஆலய கட்டிட நிர்மான வேலைக்குக் கொடுப்பதாக வாக்களித்தார். அவர் வாக்களித்தது போல அவர் இறந்த பின்பு 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 16ம் திகதி அவர் அளித்த பணம் ஆலயத்தின் முக்கிய பகுதியான அடித்தள வேலைக்குப் பயன்படுத்தப்பட்டது. தடைபட்டிருந்த ஆலய நிர்மாண வேலைகள் மீண்டும் தொடர்ந்தன.

1992ம் ஆண்டு அடித்தள வேலைகள் நிறைவேற்றப்பட்டு தவக்கால பாஸ்கா சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. அத்துடன் மூன்று மொழிகளிலும் அமைந்த திருவழிபாட்டுக்குழு ஒன்று அமைக்கப்பட்டது. சிறுவர்களின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்ட அருட்தந்தை ஆங்கில வகுப்புகளையும், இளைஞர்களின் கல்விக்கு ஊக்கமளித்து அவர்களுக்கும் ஆங்கில வகுப்புக்கள், கணனி வகுப்புக்கள் போன்றவற்றையும் ஒழுங்கு செய்தார். இவ்வாறான வகுப்புக்களை இலவசமாக வழங்க பெரியவர்கள் முன்வந்தார்கள்.

ஆன்மீக ரீதியில் மறைக்கல்வி, மரியாயின்சேனை போன்ற அலகுகளையும் ஏற்படுத்தினார். மறைக்கல்வி பரிசளிப்பு விழாவினை சிறிய அளவில் ஏற்பாடு செய்து பாடசாலைக்குத் தேவையான அளவு அப்பியாசப் புத்தகங்களையும் பரிசாக வழங்கினார். 1993ம் ஆண்டு மார்கழி மாதம் அருட்தந்தை பேற்ரம் அடிகளாரின் கனவு நனவாகியது. ஆலய நிர்மான வேலைகள் நிறைவுபெற்று முன்னாள் பேராயர் அதிமேதகு. நிக்கலஸ் மார்க்கஸ் ஆண்டகையின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு ஆலயத் திறப்புவிழா கொண்டாடப்பட்டது.

அருட்தந்தை பேற்ரம் அடிகளாரைத் தொடர்ந்து பணிப் பொறுப்பேற்ற அருட்பணி. மெல்கம் பெரேரா அடிகளார், அருட்பணி. கிறிஸ்டோபர் அபேரத்ன அடிகளார், அருட்பணி. கமிலஸ் அடிகளார் ஆகியோர் சிறப்பாக பணியாற்றி வந்தார்கள். இவர்கள் தங்களுடைய பணிக்காலங்களில் மிகவும் விருப்புடனும் அன்புடனும் பணிப்புரிந்தார்கள் எப்பொழுதும் மொழி பேதமின்றி மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு வித்திட்டனர். ஏழை எளியவர்களுக்கு உதவிகள் வழங்கி சமூகத்தில் ஒதுக்கப்பட்டிருந்த மக்கள் தலைநிமிர்ந்து வாழக்கூடிய சூழலை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்தார்கள். பிள்ளைகளின் கல்விக்கும் ஊக்கமளித்தார்கள். இங்கு வாழும் பல்சமய பல இன மதத்தலைவர்களுடனும், மக்களுடனும் நல்லுறவு கொண்டிருந்தார்கள்.



தற்போதைய பங்குத்தந்தையான றெஜினோல்ட் லூசியன் அடிகளாரும் தமது பணியை மிகச் சிறப்பாக ஆற்றி வருகின்றார். தம் ஆலய 25வது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் 29ம் நாள் புரட்டாசித் திங்கள் கொண்டாடவுள்ளனர். அதற்கு ஆயத்தமாக இம்மாதம் 19ம் நாள் நவநாள் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 29ம் நாள் கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் காலை 8.00 மணிக்கு ஜுபிலித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஜுபிலி விழா நிறைவுபெறும்.

# “நீங்கள் திருமுழுக்கு பெற்று அனுப்பப்படுகிறீர்கள்”

Baptised and sent 2019

நற்செய்தியின் படி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட மறை-பரப்பு மாதமாகிய ஐப்பசி மாதத்திற்கான வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு 2019 ஆவணி மாதம் 19ம் திகதி தேசிய மறைபரப்பு சபையின் தலைவர் அதி வணக்கத்திற்குரிய ஆயர் கரல்ட் அன்டனி பெரேரா அடிகளின் தலைமையில் கூட்டம் நடாத்தப்பட்டது, இதில் பாப்பறை மறைபரப்பு சபைகளின் தேசிய இயக்குனர் உற்பட மறைமாவட்ட இயக்குனர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். அத்தோடு இக் கூட்ட இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய செயற்பட இறைவனிடம் வரம் வேண்டுவோம்.

விசேடவிதமாக மறைபரப்பு மாதத்தில் தேசிய ரீதியாக ஆயத்தப்-படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை நிலைநாட்டுவதினூடாக இதைப்பற்றி அனைவரும் அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். என்பதனால் எமது ஆயர்களும் பாப்பிறை மறைபரப்பு சபைகளின் மறைமாவட்ட இயக்குனர்களும் இம் மறைபரப்பு சேவை-க்கு உங்களின் அர்ப்பணிப்பையும், ஒத்துழைப்பை பெற்றுத் தரும் படி தயவுடன் கேட்டு நிற்கின்றார்கள். மேலும் மறைமாவட்ட ரீதியாக விசேட வேலைத்திட்டங்களை ஆயத்தப்படுத்தி செயற்படுத்த உங்களின் முழு ஒத்துழைப்பையும் கொடுக்கவும்.

ஈ.எம்,எம் இன் விஷேட மறைபரப்பு மாத வெளியீடு ஒன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய காரியாலயத்தினால் வெளியிடப்படும், இம் மறைபரப்பு வெளியீட்டை 2019 புரட்டாதி 29வது ஞாயிறு தினத்தன்று பங்குகளில் திவ்விய திருப்பலியின் போது பிரசுரிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2019 ஐப்பசி மாத முதல் செவ்வாய்க்கிழமை மறைபரப்பு பணியின் புரவலர் லேசியோயின் புனித திரேசா அவர்-களின் திருவிழா திருப்பலியினை எல்லா ஆலயங்களிலும் சிறப்பிக்குமாறு கேட்டுக்-கொள்கின்றோம்.

மக்கள் திருமுழுக்கினால் பெற்ற அழைப்பினை நினைவூட்டும் முகமாக அனைத்து தேவாலயங்களிலும் 2019 புரட்டாதி மாதம் 29ம் திகதி முதல் “மறைபரப்பு” கொடி (BANNER) காட்சிப்படுத்தப்படும். அத்தோடு வருடம் பூராகவும் இதனை காட்சியில் வைத்தி-ருக்குமாறு கேட்டுக்-கொள்கின்றோம்.

திரு இருதய சபைகளின் தலைமையில் 2019 ஐப்பசி மாதம் 4ம் திகதி (மாதத்தின் முதல் வெள்ளி)




திவ்விய நற்கருணை ஆராதனையை நடாத்தவும்.

2019 ஐப்பசி 13ம் திகதி புனிதர்கள் மற்றும் மறைசாட்சிகளை நினைவுகூறுவதோடு நற்செய்தி வாசகங்களை அடிப்படையாகக் கொண்டு புனித ஜோசப் வாசின் பணி மற்றும் தியாகங்களை ஞாபகப்படுத்தவும்... 15

# அதிதூதர்களான புனித மிக்கேல், கபிரியேல், ரபேல்

## மிக்கேல் என்றால் இறைவனுக்கு இணை யார்?



என்பது பொருள். இச்சொற்களுடன், மோட்சத்தில் சாத்தானையும் அவனுடைய சகாக்களையும் எதிர்த்து நல்ல சம்மனசுகள் போரிட்டார்கள். முக்கியமான வானதூதர்களில் மிக்கேல் ஒருவர்; சாத்தானை முறியடித்தவர்களின் தலைவர். அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்தே திருச்சபையின் பாதுகாவலராக வந்திக்கப்பட்டு வருகிறார். தனி நபர்களும், பங்குகளும், மறைமாவட்டங்களும் இவரை தங்களது பாதுகாவலராக தேர்ந்தெடுக்கிறார்கள்.

புனித 13ஆம் சிங்கராயர் பாப்பானவர் ஒருநாள் பேசிக்கொண்டிருக்கையில் திடீரென மயங்கி விழுந்தார். அவர் இறந்து போனார் என்று எல்லோரும் நினைத்தார்கள். எழுந்த பின் அருகிலிருந்தவர்களைப் பார்த்து 'நான் மயக்கமுற்றுக் கிடக்கையில் வரங்காலத்தில் திருச்சபைக்கு வர இருந்த சங்கடங்களை கடவுள் எனக்குக் காட்டினார். திருச்சபை அழிந்து விடுமோ என்று அஞ்சி நடுங்கினேன். அப்பொழுது திடீரென புனித மிக்கேல் அதிதூதர் தம் சகாக்களுடன் வந்து எதிரிகளை விரட்டியடித்து திருச்சபையைக் காத்தார்' என்று கூறி உடனே ஓர் அழகிய செபத்தை (அதிதூதரான புனி மிக்கேலே என்று தொடங்கும் செபத்தை) எழுதி அதை ஒவ்வொரு நாளும் திருப்பலிக்குப் பின்செபிக்கும்படி கட்டளையிட்டார். அந்த நல்ல வழக்கத்தை கைவிட்டதனாலேயே திருச்சபைக்கு இத்தனை தொல்லைகள் வந்திருக்கின்றன என்று சிலர் கருதுகின்றனர்.

## கபிரியேல் என்றால் இறைவனின் பலம்

என்பது பொருள். கடவுளது வல்லமையையும் மகிமையையும் காட்டும் ஒவ்வொரு வேளையிலும் இவர்தூதராக அனுப்பப்படுகிறார். மீட்பரின் வருகையையும், அவர் வரும் காலத்தையும் இவர் முன்னறிவித்தார். மீட்பரின் முன்னோடியின் பிறப்பையும் இவர் அறிவித்தார். வார்த்தையானவர் மாமிசமான போது இவர் பிரசன்னமாய் இருந்தார். மீட்பரை ஆராதிக்க இடையர்களை அழைத்தவரும், புனித கபிரியேலே. ஒலிவ மரத்தோப்பில் இயேசுவைத் தேற்றிறயவரும் புனித கிபிரியேல் என பிதாக்கள் கூறுகிறார்கள்.



இவர் ஆறுதலின் தூதர் , இரக்கத்தின் தூதர். பழைய ஏற்பாட்டிலும் இவரைப் பலமுறை பார்க்கிறோம். முதலில் தானியேல் இறைவாக்கினருக்கு இவர் தோன்றினார். தானியேல் பாரசீக, கிரேக்க இராச்சியங்களைக் காட்சியில் கண்ட பின் இவர் தோன்றினார். கபிரியேல் எவ்வளவு மாட்சியுடன் இருந்தார் என்றால் தானியேல் நடுங்கி முகம் குப்புற விழுந்தார். கிறிஸ்து அரசர் வர இத்தனை வாரங்கள் பிடிக்கும் என்று தானியேலுக்கு அறிவித்தவரும் இவரே.




## ரபேல் என்னும் சொல்லுக்கு இறைவன் குணமாக்கினார்"

என்பது பொருள். தொபியாசுக்கு இவர் அசரியாஸ் என்னும் பெயருடன் தோன்றி அவருடைய மகனை அழைத்துச்சென்று பத்திரமாய்த்திரும்பக் கொண்டு வந்தார். அவருக்கு வரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொடுத்தார். மீனின் வாயிலிருந்து இளைஞனைக் காத்தார். தொபியாஸ் திரும்பக் கண்பார்வை பெறச் செய்தார். இறைவனின் சிம்மாசனத்துக்கு முன் நிற்கும் ஏழு தூதர்களில் நான் ஒருவன், என்பெயர் ரபேல்" என்று அறிவித்தார்.

**சிந்தனை: திருச்சபையைக் காக்கும்படி புனித மிக்கேலை அடிக்கடி இறைஞ்சுவோம்!**

**செபம்: அதிதூதரான புனித மிக்கேலே, கபிரியேலே, ரபேலே, இன்று சாத்தானோடு இறுதிப்போர் நடத்தும் அனைவர் மேலும் இரக்கமாயிரும்!**

# உடலை வளர்த்து உயிர் காப்போம்!

***மானிடராகப் பிறத்தல் அரிதிலும் அரிதல்லவா...!***



பிரபஞ்சத்தில் மானிடராக பிறத்தல் என்பதே மிக அரிது. ஏனென்றால் பூமியில் வாழும் விலங்கினங்களில் மனித இனமே சிறந்தது. மனிதனுக்குத்தான் சிந்திக்கக்கூடிய, ஆராய்ச்சிக்குரிய புத்திக்கூர்மை, பேச்சு, தைரியம், நல்லது எது கெட்டது எது என பகுத்தறியக்கூடிய தன்மை போன்ற சிறப்புக்களைக் கடவுள் மனிதனுக்கு கொடுத்து மேன்மையானவனாகப் படைத்தார்.

மானிடராக பிறந்த பின்பு நாம் எப்படி பல்வேறு அதிசயங்கள் அடங்கிய இந்த ***காயத்*** தை (உடலை) எவ்வாறு பேணிக்காக்கிறோம் என்பதை பொறுத்தே சிந்தனையும், ஆரோக்கியமும் அமையும். Life is a Race என்று ஓடிக் கொண்டேயிருக்கிறோம். உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

நமது உடல்... நமது ஆரோக்கியம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியத்துக்கு அதிக நேரம் ஒதுக்கி, அதிக சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆழ் மனதில் இருந்து ஆரோக்கியமே முக்கியம், அதுவே எனது தலையாய வேலை என்ற எண்ணம் ஆழமாக வேண்டும். அப்போதுதான் உடம்பை பேணிக்காத்து உயிரை நிலை நிறுத்த முடியும்.

ஆயுர்வேத மருத்துவம் பல்வேறு வழிமுறைகளில் நாம் பின்பற்ற வேண்டிய ஆரோக்கியம் சம்பந்தமான பல கடமைகளைக் கூறியுள்ளன.

***ஒரு மனிதனுக்கு எவ்வளவு வேலையிருந்தாலும் உடலை ஆரோக்கியமாக பேணிக்காப்பதே முக்கிய வேலை***

என்கிறது ஆயுர்வேதம். அதாவது எவ்வளவு வேலையிருந்தாலும் உடலின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

உடலின் ஆரோக்கியத்தைக் கருத்தில் கோண்டே வேலைகளைச் செய்ய வேண்டும். எந்த வேலையிலும்/ வேளையிலும் ஆரோக்கியமே மையக்கருத்தாக முதன்மையாக இருக்க வேண்டும். ஆனால், நாம் இன்று எப்படி இருக்கிறோம்? இயந்திர கதியான வாழ்க்கை. இலக்கை எட்ட வேண்டும் என்ற துரிதமான செயல்பாடு, சம்பாதிக்க வேண்டும் என்பதால் சரியான வேளையில் சரியான அளவில் உணவை எடுத்துக் கொள்ளாமை, உடலைப் பராமரிப்பதற்கு என நேரம் ஒதுக்காமை என பல தவறுகளைச் செய்கிறோம்.

ஏனெனில் உடலும், உயிரும் பிரிக்க முடியாத நட்பை கொண்டுள்ளது.

*உடம்பில் உயிர் நிலைத்து இருக்க உடலின் ஆரோக்கியம் அவசியம். நோய் முதலான காரணங்களால் உடம்பு அழியுமாயின் உயிரும் அழியும். அவ்வாறு அழிந்தால் மெய்யறிவை அடைய இயலாது. ஆகவே உடம்பை வளர்க்கும் வழிமுறைகளை அறிந்து உடம்பை வளர்த்தேன். அதனால் உயிரை அழிவிலிருந்து காத்தேன்* என்கிறார் திருமூலர்.



மனித இனத்திற்கு நோய் வராமல் தடுத்து, நோய் வந்தாலும் அவற்றை குணமாக்கி மீண்டும் ஏற்படா வண்ணம் செய்யும் ஒரு முழுமையான மருத்துவமுறை ஆயுர்வேதம். ஒரு மனிதன் எப்படி எல்லாம் வாழ வேண்டும், காலை எழுந்தது முதல் இரவு தூங்கும் வரை கருத்தரிப்பு பிரசவம் தொடங்கி ஆரோக்கியத்திற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை முழுமையாக விளக்கியிருக்கிறது.

வாழ்வாதாரத்திற்கு ஏதேனும் ஒரு வேலை செய்ய வேண்டும். அதே சமயம் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் வேண்டும். இந்தச் சூழலை எப்படி கையாளலாம் என்பதற்கு ஆயுர்வேதம் சொல்லும் எளிய வழிகள் இவை...

- நமது ஒவ்வொரு உடல் உறுப்பிலும் அக்கறை செலுத்த வேண்டும். எந்த உறுப்பிலும் சிறிது அச்சம் தோன்றினாலோ உடனே கவனிக்க வேண்டும்.
- எந்த வேலையாக இருந்தாலும், இயற்கையாக உடலில் ஏற்படும் வேகங்களை எக்காரணம் கொண்டும் தடுத்து நிறுத்தக்கூடாது.
- தினமும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். குறைந்தபட்சம் வாரம் ஒருமுறையாவது எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும்.
- அஜீரணம் இருக்கும்போதும் பசிக்காதபோதும் உணவு உண்ணக்கூடாது
- காலை வேளை உணவைத் தவறாது எடுத்துக்கொள்ள வேண்டும். இரவில் எளிதில் ஜீரணமாகக்கூடிய உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். இரவு நேரத்தில் எளிதில் ஜீரணமாகாத உணவை அதிக அளவில் எடுத்துக்கொண்டால் கல்லீரல் பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.
- உழைப்புக்கு ஏற்ற உணவையே எடுத்துக்கொள்ள வேண்டும். உடல் உழைப்பில் அதிகளவில் ஈடுபடுவோர் அதிக சக்தி கொடுக்கக்கூடிய உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- உடலுக்குத் தேவையான தண்ணீர் பருக வேண்டும்.
- கட்டாயம் இரவில் 6-8 மணி நேரம் உறங்க வேண்டும்.
- காலையில் சூரிய உதயத்திற்கு முன்பு தூக்கத்திலிருந்து எழுந்துவிட வேண்டும்.
- மன உளைச்சல், கோபம், பொறாமை, அதிக சிந்தனை அடுத்தவர்களுடன் ஒப்பிட்டு வாழ்தல் போன்றவை கூடாது.
- எந்த பிரச்சினைகளாக துக்கங்களாக இருந்தாலும், மனவலிமை அதிகப்படுத்திக்கொண்டு தைரியமாக வாழ வேண்டும்.
- வயதுக்கும், பருவ காலத்திற்கு ஏற்றவாறு உணவுகளையும் பழக்க வழக்கங்களையும் தேற்றிக்கொள்ள வேண்டும்.
- மது, மாது, புகை, போதை வஸ்துகளுக்கு அடிமையாகக் கூடாது.

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## 01 தேவ அன்னையே...

'கடந்த காலத்தில் நாட்டில் நடந்த நிகழ்வுகளால் முக்களின் மனங்கள் இன்றும் பாதிக்கப்பட்ட உணர்வுடனேயே 'இருக்கிறது" என கடந்த 8ம் திகதி தேவதாயாரின் பிறந்த தின திருப்பலியின் போது கூறினார்கள். பல இன, பல மொழி மக்களிடையே இருந்த இணைப்பு, நல்லிணக்கம் குறைந்துள்ளதுடன் வரப்போகும் தேர்தலின் பின்பு நாட்டு மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடமோ என்ற அச்சமும் அவர்களைப் பற்றிப்பிடித்துள்ளது"

அதி.மேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லுசியாஸ் பேராலயத்தில் நடைபெற்ற தேவ தாயாரின் பிறந்த தின திருப்பலி மறையுரையின் போது தெரிவித்தார்கள்.

'அன்பான தேவ அன்னையே, நாம் உம்மை அன்பு செய்கிறோம்; எமது பாவத்தைப் பாராது எம் மீது இரக்கம் வைத்து, எம்மைக் காப்பாற்றும்" என கூறி எமது நாட்டையும் நாட்டு மக்களையும் தேவ அன்னைக்கு கர்தினால் அவர்களால் அர்ப்பணம் செய்யப்பட்ட பின்பு தனது மறையுரையைத் தொடர்ந்த அவர்கள்,

1949ம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின்போது எமது நாட்டை பாதுகாத்த தேவ தாயாருக்கு 70 வருடங்களின் பின்பு மீண்டும் எமது நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்றுமாறு கெஞ்சி மன்றாடுவோம் என்றார்.

திருப்பலியின் பின்பு பங்கு சிறுவர் சிறுமியருடன் இணைந்து அன்னையின் பிறந்த தின கேக் வெட்டினார்கள். இந்நிகழ்வை ஒழுங்கு செய்த பேராலய பரிபாலகர் அருட்தந்தை கித்சிறி திரிமான்ன, உதவி பங்கு தந்தை ரூபன் மரியதாஸ், உதவி பங்கு தந்தை அசித்த சாமர சமரதுங்க ஆகியோருடன் பங்கு மக்களும் இணைந்துக்கொண்டனர்.

## 06 200வது ஆண்டில்...

சிங்கள மொழியிலே அருட்பணி. கலன பீரிஸ் அடிகளாரும் சிறப்பிக்கவுள்ளனர். **மாலை ஆராதனை** 05.10.2019 அன்று மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகும். **திருவிழாத் திருப்பலிகள்** 06.10.2019 அன்று காலை 05.30 மணி, 06.45 மணி, 08.00 மணிக்கு திருவிழா பாடற் திருப்பலி, காலை 11.30, மாலை 6.00 மணி திருப்பலிகள் தமிழிலும், காலை 09.45 மணிக்கு திருவிழா பாடற் திருப்பலி சிங்களத்திலும், மாலை 05.00 மணி திருவிழா பாடற் திருப்பலி ஆங்கிலத்திலும் நடைபெறும். திருவிழா திருப்பலியில் கலந்து கொண்டு அன்னையின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**பங்குத்தந்தை, உதவிப்பங்குத்தந்தை மற்றும் பங்கு மேய்ப்புப்பணி சபை**

## 09 டிலாசால்....

அவ்வேளையில் தான் புதுமை நிகழ்ந்தது. அதாவது அவர் டிலாசால் சகோதர சபையை நிறுவ ஆயத்தமானார். இதுதான் இறைவனின் திட்டம் டிலாசாலுக்கு தெரியாமலே இறைவன் இதை அவரது வாழ்வில் நிகழ்த்தினார். இதை இறைவாக்கினர் ஜெரோமியாவின் வாழ்விலே நாம் பார்க்கின்றோம். இதை இன்னும் ஆழமாக சங்கீத ஆசிரியர் சங்கீதம் 139இல் விளக்குகின்றார். எமது வாழ்வில் இப்புதுமை நிகழ நாம் எம்மை அர்ப்பணிக்க வேண்டும். எம்முடைய திட்டம் அல்ல இறைவனின் திட்டம் நிகழ நாம் இறைவனோடு ஒத்துழைக்க வேண்டும்.

இதுதான் என்னுடைய வாழ்விலும் நிகழ்ந்தது. நானும் இச்சகோதரர்களினால் வளர்த்தெடுக்கப்பட்டவன் என்பதில் பெருமையடைகின்றேன். இந்த ஆலயத்தில்தான் எனக்கு அழைப்பின் குரல் கேட்டது. பாடசாலை வாழ்வில் அருட்சகோதரர்கள் எனக்குத் தண்டனை வழங்கி என்னைப் புடமிட்டார்கள். இதற்கு நான் நன்றியுடையவனாக இருக்கின்றேன். அவர்களுடைய பணி வித்தியாசமானது. இன்று குருக்களாக வரவே இளைஞர்கள் விரும்புகின்றனர். சகோதரனாக வர இளைஞர்கள் தம்மை அர்ப்பணிப்பது குறைவாகவே இருக்கின்றது. இதனால்தான் எமக்கு பாடசாலைகளுக்கு சகோதரர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. இன்று சகோதரர்கள் பல்வேறு விதமான விடயங்களுக்கு, முகம் கொடுக்கின்றனர். அவர்களுடைய வாழ்வு சவால் நிறைந்தது. எனவே அவர்களுடைய பணிக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவர்களுக்கு அழைத்தல் பெருக இன்று தொடக்கம் சிறப்பாக மன்றாடுவோம் என்று கூறினார்.

ஈற்றில் ஜூபிலி கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் பகிரப்பட்டதோடு, அழைக்கப்பட்ட அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டு ஜூபிலி விழா நிகழ்வுகள் மகிழ்ச்சியாக இனிதே நிறைவேறியது.

## 02 குருத்துவ வாழ்வில்...

மேலும் சில்லாலை தேவநற்கருணை சபையில் பிரதான அருட்தந்தையாகவும் 2014 - 2017ம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் சங்கானை புனித பிரான்சிஸ் சாலிஸ் ஆலயத்தில் பங்குத்தந்தையாகவும் கடமையாற்றினார். தற்போது இரத்தினபுரி மறைமாவட்டத்தின் மாஹேன வரக்காப்பொல கிறிஸ்து அரசர் ஆலயத்தில் உதவிப் பங்குத்தந்தையாக கடமையாற்றுகின்றார்.

பங்குத்தந்தை, அருட்தந்தை என்ற ஸ்தானத்தை விட்டு தந்தையாக, தோழனாக, இயேசுவின் வழி மக்களை வழிநடத்திய இவரது சேவை இவ்வருடம் 50 ஆண்டுகளை நிறைவு செய்து பொன்விழா காண்கிறது. அதை கொண்டாடும் வகையிலும் எமக்கு அளவில்லா சேவை புரிய, அருட்தந்தை ஜோவை எமக்கு தந்ததற்காக இறைவனிற்கு நன்றி கூறும் வகையிலும் இவ்வருடம் புரட்டாதி 13ம் திகதி கொழும்பு பிலிப்னேரி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

அவரை வாழ்த்துவதோடு அவரின் சேவை தொடர இறைவனை பிரார்த்திக்கின்றோம். எதிர்வரும் காலங்களிலும் அவரிற்கு தேவையான உடல், உள ஆரோக்கியத்தை பொழிந்தருள தூய ஆவியை மன்றாடுகின்றோம்.

**தந்தையின் சேவை தொடர எமது வாழ்த்துக்கள்!**

## 14 உடலை வளர்த்து...

- நம்பிக்கையுள்ள இறை பணியில் தூய மனதுடன் பிரார்த்தனையில் ஈடுபட வேண்டும்.
- உடற்பயிற்சி, தியானம், யோகா போன்றவைகளுக்கு நேரம் ஒதுக்க வேண்டும்.
- வாரம் ஒருவேளை உண்ணா நோன்பும், ஓய்வும் எடுத்துக் கொள்ள வேண்டும். இது பாதிப்படைந்த உடல் உறுப்புகளைத்தானே சீர் செய்துகொள்ள உதவும்.

மேலும் உடலில் உயிர் இருக்கும் 10 இடங்களை ஆயுர்வேதம் கூறுகிறது. நெஞ்சு, பொட்டுகள், தலை, இதயம், சிறுநீரகம், கழுத்து, ரத்தம், விந்து, ஓஜஸ்(தாதுக்களின் சாரம் இதுவே உயிர்சக்தி), ஆசனவாய். ஆகிய உறுப்புகளை அதிகளவில் கவனத்தில் கொண்டு சிறிய அறிகுறிகள் தோன்றினாலும் அலட்சியப்படுத்தாமல் உடனே கவனித்து உடலையும், உயிரையும் பேணிக்காப்போம்.

## 10 விவிலிய வினா விடை

95. கால்களில் படிந்துள்ள தூசியை உதவிவிடுங்ள்" என்றார் (6:11)
96. பல பேய்களை ஓட்டினார்கள், உடல் நலமுற்றோரை எண்ணெய் பூசி குணப்படுத்தினார்கள் (6:13)
97. திருமுழுக்கு யோவான் என்றும், எலியா என்றும், இறைவாக்கினர் என்றும் (6:14,15)
98. தன்னால் தலையை வெட்டப்பட்ட யோவான் உயிருடன் எழுப்பப்பட்டு விட்டார் என்று நினைத்தான் (6:16)
99. தன் சகோதரனான பிலிப்பின்மனைவியை (6:17)
100. யோவான் (6:18)
101. ஏரோதியா (6:19)
102. ஏரோதியாவுக்கு தன் மகள்மூலம்யோவானுடைய தலையை கேட்க வாய்ப்பு கிடைத்தது (6:24)
103. ஒரு காவலனிடம் (6:27)
104. யோவானுடைய சீடர்கள் (6:27)
105. பாலைவனத்திலுள்ள ஒரு தனிமையான இடத்தில்

## 11 திருடப்படும் மூளை

இன்ஸ்டாகிராம், டுவிட்டர், கூகுள், வாட்ஸ் ஆப், அமேசான் போன்ற நிறுவனங்கள் இனைஞர்களின் மூளையைத் திருடி, தங்களுக்கான விற்பனையை மேற்கொள்கிறார்கள். இந்நிறுவனங்கள் ஒவ்வொரு நாளும் உருவாக்கும் 'அல்காரிதங்கள்' (ஒரு மணிநேரம் ஒருநாள் எத்தனை பேர் பார்க்கிறார்கள் எனக் கணக்கீடு செய்யும் முறை) மற்றும் செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களைக் கொண்டு நம் மூளைகளை 'ஹேக்' செய்கிறார்கள். நாம் அடிக்கடிப் பயன்படுத்தும் இணையத்தளங்கள் எது என்பதிலிருந்து, ஆரம்பித்து நம்மை எப்படி எல்லாம் சமூக வலைத்தளங்களுக்கு அடிமை ஆக்குவது, எந்த விதத்தில் எல்லாம் ஆன்லைன் ஷாப்பிங்கிற்கு அழைத்துச் செல்வது, எந்த மாதிரி யுக்திகளைப் பயன்படுத்தி, நம் மூளைகளைச் சலவைச் செய்து நம் மணிபர்ஸ்களை காலி செய்வது என அனைத்தையும் தீர்மானிக்கிற தந்திர ஆட்டத்தை இவர்கள் நடத்துகிறார்கள். இந்த வேலையை செயற்கை நுண்ணறிவு இயந்திரங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இந்த 'அல்காரிதங்கள்' நம்முடைய செயல்பாடுகளைக் கண்காணித்து, அவற்றையெல்லாம் தொகுத்து, அதன் அடிப்படையில் விதிகளை நேரத்திற்கு நேரம் மாற்றி நம்மை அடிமைகளாக்குகின்றன.




**முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

**எவீனா ரேச்சல்**

**2019.09.25**

**நீர்கொழும்பை பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட லக்ஷான், ஹன்சனி தம்பதிகளின் தவப்புதல்வி எவீனா ரேச்சல் 2019.09.25ம் திகதி தனது முதலாவது பிறந்த நாளை இத்தாலியில் வெகு விமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தொட்டப்பா அனுஷன், தொட்டம்மா ஹிருனி, சுதுதாத்தா, சுதுஅம்மா, லொகுதாத்தா, லொகுஅம்மா, பெரியப்பா, பெரியம்மா அஸ்வினி அக்கா, இஷான் மாமா மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.**

(24950)


## I நன்றி...

சிலாப மறைமாவட்டத்தைச் சேர்ந்த புதிய இயக்குனரை எமது நிலையத்தின் சார்பாக வாழ்த்தி வரவேற்கின்றோம்.

இவர் தன் பணிகளைச் சிறப்பாக தொடர்ந்து செய்திட எல்லாம் வல்ல இறைவன் தமது ஆசீரைப் பொழிந்தருளுமாறு வேண்டுகிறோம்.

**அருட்சகோ. P. ரஞ்சி மற்றும் நிலைய பணியாளர்கள்.**
**தேசிய மறைக்கல்வி நடுநிலையம்**


**15வது வருட நினைவுநாள்**



**(லியனகேமுல்லையில் வசித்த)**
**அலோசியஸ் பிள்ளை**
**பிறப்பு : 1950 - 08 - 07**
**இறப்பு : 2004 - 09 - 11**

அன்பான கணவருக்கு! இறைவனிடம் சென்று 15 வருடங்களை நினைவுகூறும் இக்கணத்தில் உங்கள் ஆன்மா இயேசுவின் திருமுக ஒளியைப் பெற்று நித்திய இளைப்பாற்றி அடைய மன்றாடுகின்றேன்.

**இவரின் பிரிவால் துயருறும் மனைவி பாத்திமா மற்றும் குடும்பத்தினர்.**

(29033)


## 13 நீங்கள் திருமுழுக்கு...

2019 ஐப்பசி மாதம் 27ம் திகதி திவ்விய திருப்பலிக்கு முன் அல்லது பின் திருச்செபமாலையை உச்சரிக்கவும். செபமாலையை வழிநடத்துவதற்கான கையேடுகள் உங்களின் பங்குத்தந்தையர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஆகவே மறைபரப்பு மாதத்தின் இறுதி ஞாயிறு தின செபமாலையை பக்தி முயற்சியுடன் சொல்லவும். விசேட மறைபரப்பு மாதத்தினை அடிப்ப-டையாக் கொண்டு நடாத்தப்படும் திவ்விய திருப்பலி புனித வின்சன் டி பவுல் சபையினால் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.

விசேட மறைபரப்பு மாதத்திற்கு தேவையான வழிகாட்டுதல் கையேடு பாப்பிறை மறைபரப்பு சபைகளின் தேசிய காரியாலயத்தினால் தயாரித்து பாப்பிறை மறைபரப்பு சபைகளின் மறைமாவட்ட இயக்குனர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அத்தாடு இம்மறைபரப்பு செயற்திட்டத்திற்கு உங்களின் பங்களிப்பினை கொடுப்பதுடன் திருமுழுக்கினால் பெற்ற அழைப்பிற்கு சான்று பகர்வதற்கு நீங்களும் ஒன்றிணையுங்கள்.

**இம் மறைபரப்பு சேவையினால் நாம் இறைவனுடைய இராட்சியத்தை நாடுவோம். எப்பொழுதும் நற்செய்தியை மகிழ்வுடன் பறைசாற்றுவோம்.**



**அருட்பணி பசில் ரொஹான் பர்னாந்து**
**மறைபரப்பு சபையின் தலைவர் மற்றும்**
**பாப்பிறை மறைபரப்பு சபையின் இயக்குனர்.**

# “நாம் மனந்திரும்பி புதிய தேசத்தை நோக்கிச் செல்வோம்”.

## அபோஸ்தலிக்க புதுப்பித்தல், கிது தன புபுதுவ நம் தேசத்திற்காக 40 நாள் செபத்தை பிரகடனம் செய்துள்ளது.

**செப வழிப்பாடு 2019 புரட்டாதி மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகியது**

நம் தேசத்தை மாற்றி அமைப்பதன் மூலம் **“புதிய வானம் புதிய பூமி”** (திருவெளிப்பாடு 21:1-3) நம் தேசத்தில் உதயமாகவும் இந்த ஆழ்ந்த நோக்கத்தை முன்கொண்டு தங்களை அர்ப்பணிக்கும் அரசியல்வாதிகளும், ஆட்சியாளர்களும் முன்வர வேண்டுமென்று நம் இதயங்களையும், குரலையும் எல்லாம் வல்ல இறைவனாகிய தந்தையையும், இலங்கை தேசத்தின் அன்னையாகிய தேவ தாயாரையும் நோக்கி எழுப்புவோம்.

இந்த முக்கிய பெருந்தகையான முயற்சியில் அனைவரும் மனமுகந்து ஈடுபட வேண்டுமென்று மனமார கேட்டுக் கொள்கிறோம்.
மேலதிக விபரங்களுக்கு உங்கள் பகுதியில் அல்லது பங்கிலுள்ள கிது தன புபுதுவ அங்கத்தவர்களை தொடர்பு கொள்ளவும்.

நம் தேசத்தில்...

- இலஞ்ச ஊழல் ஒழிக்கப்படவும்
- ஏழைகள் உயர்த்தப்படவும்
- நேர்மையும், நீதியும் நிலை நாட்டப்படவும்

என்ற எதிர்நோக்குடன், நம்பிக்கையோடு செபிப்போம்.

**ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.**
**ஆன்மீகப் பணிப்பாளர், இறைவாக்காளர் குழு**
**கிது தன புபுதுவ**

(29123)

வணக்கத்திற்குரிய. றொபின்சன் விஜயசிங்க,
ஆன்மீக இயக்குனர், கிது தன புபுதுவ,
ஸ்ரீ பிரசன்சராமைய, வல்பொல, றாகமை.
office@pubuduwa.org




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஒப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

<u>தொடர்புகொள்ளுங்கள்</u>

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com

## கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

<u>தொடர்புகொள்ளுங்கள்</u>
இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com




| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்